بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்
வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 41 & 42

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரபீயுஸ் ஸானீ 06 - 13 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - அகா 10 - 17 ★ அக்டோபர் 10 - 17 2024

## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَحۡسَبَنَّ اللّٰہَ غَافِلًا عَمَّا یَعۡمَلُ الظّٰلِمُوۡنَ ۬ؕ اِنَّمَا یُؤَخِّرُہُمۡ لِیَوۡمٍ تَشۡخَصُ فِیۡہِ الۡاَبۡصَارُ ۙ

**பொருள்**
(செவியேற்பவரே!) அநீதியிழைப்போர் என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்பது குறித்து, அல்லாஹ் கவனமற்றவனாக இருக்கின்றான் என்று நீர் ஒருபோதும் நினைக்காதீர். திறந்த கண்கள் நிலைகுத்தியவாறே நின்று விடுகின்ற அந்நாள் வரைதான் அவர்களுக்குக் காலக்கெடு அளிக்கப்படும். (14:43)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## மனிதன் இந்த உலகத்திலிருந்து விடைபெற்று செல்வதற்கு முன் அவன் இறைவனுடன் சமாதானம் செய்து கொள்வது அவனுக்கு அவசியமாகும். மனிதன் நல்லொழுக்கத்தை பெற்றுக் கொள்வதும் இறையச்சத்தை மேற்கொள்வதும் மகத்துவ மிக்க விஷயமாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நினைவிற் கொள்ளுங்கள்! எதிரிகளை வெற்றிக் கொள்வதற்கு இறையச்சம் அவசியமாகும். மேலும், அதற்கு, இக்காலத்தில் சிறந்த வழிமுறை இதுவேயாகும். அதாவது, எம்மிடம் வந்து தங்கியிருக்க வேண்டும். எல்லாரையும் விட முதலில் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் அவர்கள் தான் இந்த இரகசியத்தை புரிந்து கொண்டார்கள். மேலும், அன்னார் இறைவனின் திருப்திக்காக மேலும் மார்க்கத்தைப் பெறுவதற்காக இங்கு வந்து காட்டில் அமர்ந்துள்ளார்கள். அன்னார் மாபெரும் தியாகம் செய்துள்ளார்கள். தமது சொத்துக்கள் மற்றும் செல்வங்களை விட்டு விட்டார்கள். மேலும், ஒரு வனவாசத்தை மேற்கொண்டுள்ளார்கள். நான் உறுதியுடன் கூறுகின்றேன்; மவ்லவி ஸாஹிப் போன்ற தகுதிபடைத்த மற்றும் வெற்றிகரமான நபர் லாஹூர் அல்லது அமிர்தஸரஸில் வசித்தால் பின்னர் மாபெரும் உலகியல் பயன்களை அடைந்திருக்க முடியும். மேலும், அன்னார் அங்கு வந்து தங்க வேண்டும் என்று லாஹூர் மற்றும் அமிர்தஸரஸ் வாசிகள் பலமுறை விருப்பமும் தெரிவித்தனர். ஆனால், அன்னார் இங்கு வசிப்பதை விட மற்ற இடங்களின் வருமானம் மற்றும் பயன்களுக்கு முன்னுரிமை வழங்கவில்லை. அல்லாஹ் அவர்களுக்கு அதற்கான சிறந்த நற்கூலியை வழங்குவானாக.

நான் காண்கின்றேன். நமது சில சகோதரர்கள் ஒவ்வொரு வருடமும் உலகிலிருந்து விடைபெற்று சென்று விடுகின்றனர். அடுத்த வருடம் யார் இருப்பார்? என்று யாருக்கு தெரியும். எனவே மனிதன் இந்த உலகத்திலிருந்து விடைபெற்று செல்வதற்கு முன் அவன் இறைவனுடன் சமாதானம் செய்து கொள்வது அவனுக்கு அவசியமாகும்.

மேலும் மனிதன் நல்லொழுக்கத்தை பெற்றுக் கொள்வதும் இறையச்சத்தை மேற்கொள்வதும் மகத்துவ மிக்க விஷயமாகும். அதற்கு உண்மையாளர்களின் தோழமைக்கான தேவை உள்ளது. அதற்காக என்னிடம் வந்து தங்க வேண்டும் என்று கவலை கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 8, காதியான் பதிப்பு 2018)

## நபிமொழி

### ஆண்கள் பட்டாடை அணிவதற்கு ஏன் தடை விதிக்கப்பட்டுள்ளது?

(2612) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் மஸ்ஜிதுடைய வாசல்களுக்கு அருகில் ஒரு பட்டாடை ஜோடி விற்கப்படுவதை கண்டார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் அதனை வாங்கிக் கொண்டு, ஜுமுஆ நாளன்றும், பிரதிநிதிகளை சந்திக்கின்றபோதும் அணிந்து கொண்டால் அது உகந்ததாக இருக்கும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்: எவருக்கு மறுமையில் எந்தப் பங்கும் இல்லையோ அவரே அதனை அணிவார். அதன் பிறகு, சில பட்டாடை ஜோடிகள் (விற்கப்பட்டு) வந்தபோது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவற்றில் ஒரு ஜோடியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் வழங்கினார்கள். தாங்கள் இதனை அணிவதற்காக எனக்கு வழங்கியுள்ளீர்களா? பட்டாடை அணிவது தொடர்பாக தாங்கள் (வழிகாட்டல்) கூறி இருக்கின்றீர்களே! என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, நீங்கள் அணிய வேண்டும் என்பதற்காக நான் இதனை உங்களுக்கு வழங்கவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்காவில் வசித்து வந்த இணை வைப்பாளராகிய தமது ஒரு சகோதரருக்கு அதனை அணிவதற்காக கொடுத்து விட்டார்கள்

(ஸஹீஹ் அல்புகாரீ, தொகுதி 4, கிதாபுல் ஹிபா)

## உலகில் அல்லாஹ் எந்த அளவிற்கு பொருட்களை படைத்துள்ளானோ அவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒரு மேலோடு இருக்கின்றது. மேலும் ஒரு சாறு இருக்கின்றது. குர்பானிக்காக பலியிடப்படப்படும் எந்தவொரு விலங்கும் ஒரு மேலோடு ஆகும். ஆனால் அந்த குர்பானிக்கு பின்னால் செயல்பட்டு கொண்டிருக்கும் அந்த தூய்மையே அதன் சாறு ஆகும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஸூரா அல்ஹஜ் வசனம் 38-ற்கு வழங்கியுள்ள விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்திலிருந்து இந்த விஷயமும் நிரூபணமாகின்றது. அதாவது இஸ்லாமிய போதனையின் அடிப்படையில் எந்தவொரு அமலின் வெளிப்படையான வடிவமும் விளைவை ஏற்படுத்துவதில்லை. மாறாக, குர்பானியுடைய அந்த உயிரோட்டமே விளைவை ஏற்படுத்துகின்றது. அதாவது அந்த செயலுக்கு பின்னல் செயலாற்றிக் கொண்டிருக்கும் அந்த உயிரோட்டம் தான் விளைவை ஏற்படுத்துகின்றது. ஆக, சூழல்களின் கருத்துவேறுபாடுகளின் காரணமாக சிலமுறை அமலின் வெளிப்படையான வடிவில் உருவாகி விடுகின்ற கருத்துவேறுபாடுகள் ஒரு நபருடைய முன்னேற்றத்தை தடுத்து விடாது. மாறாக, அல்லாஹ் விளைவின் நேரத்தில் அவருடைய குர்பானியின் உயிரோட்டத்தை கருத்தில் வைத்தவாறு அதற்கேற்ப தீர்ப்பு வழங்குகின்றான். உதாரணமாக, ஒரு நபரிடம் பத்தாயிரம் ரூபாய் பணம் இருந்து, அவர் அதிலிருந்து நூறு ரூபாயை ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுத்து விடுகின்றார்; மேலும் மற்றொரு நபரிடம் வெறும் பத்து ரூபாய் இருந்து அவர் அதிலிருந்து ஐந்து ரூபாய் கொடுத்து விடுகின்றார் என்றால், முடிவு என்பது ஐந்து மற்றும் நூறு ரூபாய் என்பதன் அடிப்படையில் இருக்காது. மாறாக, இருவருக்கும் எவ்வளவு தேவைகள் இருந்தன. மேலும் அந்த தேவைகளுக்காக அவர்கள் எந்த அளவிற்கு தியாகம் செய்தனர்? அல்லது அவர்கள் இருவருக்கும் ஸதகா செய்வதற்கு எந்த விஷயம் தூண்டுகோலாக இருந்தது? என்று பார்க்கப்படும்.மேலும் அவற்றில் எது சிறந்தது என்றும் பார்க்கப்படும். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்ஸாப் போருக்கான காரணிகள் மற்றும் அதன் ஆரம்ப கால சூழல்கள் மற்றும் சம்பவங்கள்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஹ்ஸாப் போருக்கு முன்னதாக அபூஸுஃப்யானுடைய கடிதத்திற்கு இவ்வாறு பதில் எழுதினார்கள்:
கேளும்! இறுதியில் இறைவன் எங்களை வெற்றி பெறச் செய்வான். மேலும் காலிபுடைய முட்டாள் மக்களே! நினைவிற் கொள்ளுங்கள்! ஒரு நாள் வரும்; அன்று உங்களுடைய (சிலைகள் அதாவது) லாத்தும், உஸ்ஸாவும், இஸாஃபும், நாயிலாவும், ஹுபுலும் துண்டு துண்டாக்கப்பட்டு விடுவர். மேலும் அந்நாளில் உமக்கு இந்த எல்லாவற்றையும் நினைவூட்டுவேன்
அகழ் தோண்டுவதற்கான முடிவு என்பது வெறும் ஹஸ்ரத் ஸல்மான் ஃபாரிஸ் (ரலி) அவர்களின் ஆலோசனையின் காரணமாக மட்டும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக அல்லாஹ் இல்ஹாம் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த வழிமுறையைக் கூறியிருந்தான்

பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் பொதுவாக உலகத்தின் நன்மைக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை

மேலும் பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்கு துஆக்கள் மற்றும் ஸதக்கா மற்றும் தான தருமங்கள் செய்வதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கு அறிவுறுத்தல்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 செப்டம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **தபூக்** மாதம் **06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوْا نِعْمَةَ اللّٰهِ
عَلَيْكُمْ اِذْ جَآءَتْكُمْ جُنُوْدٌ فَاَرْسَلْنَا
عَلَيْهِمْ رِيْحًا وَّجُنُوْدًا لَّمْ تَرَوْهَا ؕ وَكَانَ
اللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرًا (١٠)
اِذْ جَآءُوْكُمْ مِّنْ فَوْقِكُمْ وَمِنْ اَسْفَلَ
مِنْكُمْ وَاِذْ زَاغَتِ الْاَبْصَارُ وَبَلَغَتِ
الْقُلُوْبُ الْحَنَاجِرَ وَتَظُنُّوْنَ بِاللّٰهِ الظُّنُوْنَا (١١)
هُنَالِكَ ابْتُلِيَ الْمُؤْمِنُوْنَ وَزُلْزِلُوْا زِلْزَالًا
شَدِيْدًا (١٢)
وَاِذْ يَقُوْلُ الْمُنٰفِقُوْنَ وَالَّذِيْنَ فِيْ
قُلُوْبِهِمْ مَّرَضٌ مَّا وَعَدَنَا اللّٰهُ وَرَسُوْلُهٗۤ
اِلَّا غُرُوْرًا (١٣)
وَاِذْ قَالَتْ طَّآئِفَةٌ مِّنْهُمْ يٰۤاَهْلَ يَثْرِبَ لَا
مُقَامَ لَكُمْ فَارْجِعُوْا ۚ وَيَسْتَاْذِنُ فَرِيْقٌ
مِّنْهُمُ النَّبِيَّ يَقُوْلُوْنَ اِنَّ بُيُوْتَنَا عَوْرَةٌ ۛ
وَمَا هِيَ بِعَوْرَةٍ ۚۛ اِنْ يُّرِيْدُوْنَ اِلَّا فِرَارًا (١٤)
وَلَوْ دُخِلَتْ عَلَيْهِمْ مِّنْ اَقْطَارِهَا ثُمَّ
سُئِلُوا الْفِتْنَةَ لَاٰتَوْهَا وَمَا تَلَبَّثُوْا بِهَاۤ
اِلَّا يَسِيْرًا (١٥)
وَلَقَدْ كَانُوْا عَاهَدُوا اللّٰهَ مِنْ قَبْلُ
لَا يُوَلُّوْنَ الْاَدْبَارَ ؕ وَكَانَ عَهْدُ اللّٰهِ
مَسْـُٔوْلًا (١٦)
قُلْ لَّنْ يَّنْفَعَكُمُ الْفِرَارُ اِنْ فَرَرْتُمْ
مِّنَ الْمَوْتِ اَوِ الْقَتْلِ وَاِذًا لَّا تُمَتَّعُوْنَ
اِلَّا قَلِيْلًا (١٧)
قُلْ مَنْ ذَا الَّذِيْ يَعْصِمُكُمْ مِّنَ اللّٰهِ
اِنْ اَرَادَ بِكُمْ سُوْٓءًا اَوْ اَرَادَ بِكُمْ رَحْمَةً ؕ
وَلَا يَجِدُوْنَ لَهُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ وَلِيًّا
وَّلَا نَصِيْرًا (١٨)
قَدْ يَعْلَمُ اللّٰهُ الْمُعَوِّقِيْنَ مِنْكُمْ وَالْقَآئِلِيْنَ
لِاِخْوَانِهِمْ هَلُمَّ اِلَيْنَا ۚ وَلَا يَاْتُوْنَ
الْبَاْسَ اِلَّا قَلِيْلًا (١٩)
اَشِحَّةً عَلَيْكُمْ ۖۚ فَاِذَا جَآءَ الْخَوْفُ
رَاَيْتَهُمْ يَنْظُرُوْنَ اِلَيْكَ تَدُوْرُ اَعْيُنُهُمْ
كَالَّذِيْ يُغْشٰى عَلَيْهِ مِنَ الْمَوْتِ ۚ فَاِذَا
ذَهَبَ الْخَوْفُ سَلَقُوْكُمْ بِاَلْسِنَةٍ حِدَادٍ
اَشِحَّةً عَلَى الْخَيْرِ ؕ اُولٰٓئِكَ لَمْ يُؤْمِنُوْا
فَاَحْبَطَ اللّٰهُ اَعْمَالَهُمْ ؕ وَكَانَ ذٰلِكَ
عَلَى اللّٰهِ يَسِيْرًا (٢٠)
يَحْسَبُوْنَ الْاَحْزَابَ لَمْ يَذْهَبُوْا ۚ وَاِنْ
يَّاْتِ الْاَحْزَابُ يَوَدُّوْا لَوْ اَنَّهُمْ بَادُوْنَ
فِي الْاَعْرَابِ يَسْاَلُوْنَ عَنْ اَنْۢبَآئِكُمْ ؕ
وَلَوْ كَانُوْا فِيْكُمْ مَّا قٰتَلُوْۤا اِلَّا قَلِيْلًا (٢١)
لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ
حَسَنَةٌ لِّمَنْ كَانَ يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ
وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا (٢٢)
وَلَمَّا رَاَ الْمُؤْمِنُوْنَ الْاَحْزَابَ ۙ قَالُوْا
هٰذَا مَا وَعَدَنَا اللّٰهُ وَرَسُوْلُهٗ وَصَدَقَ
اللّٰهُ وَرَسُوْلُهٗ ۫ وَمَا زَادَهُمْ اِلَّاۤ اِيْمَانًا
وَّتَسْلِيْمًا (٢٣)
مِنَ الْمُؤْمِنِيْنَ رِجَالٌ صَدَقُوْا مَا عَاهَدُوا
اللّٰهَ عَلَيْهِ ۚ فَمِنْهُمْ مَّنْ قَضٰى نَحْبَهٗ
وَمِنْهُمْ مَّنْ يَّنْتَظِرُ ۖ وَمَا بَدَّلُوْا
تَبْدِيْلًا (٢٤)
لِّيَجْزِيَ اللّٰهُ الصّٰدِقِيْنَ بِصِدْقِهِمْ وَيُعَذِّبَ
الْمُنٰفِقِيْنَ اِنْ شَآءَ اَوْ يَتُوْبَ عَلَيْهِمْ ؕ اِنَّ
اللّٰهَ كَانَ غَفُوْرًا رَّحِيْمًا (٢٥)
وَرَدَّ اللّٰهُ الَّذِيْنَ كَفَرُوْا بِغَيْظِهِمْ لَمْ يَنَالُوْا
خَيْرًا ؕ وَكَفَى اللّٰهُ الْمُؤْمِنِيْنَ الْقِتَالَ ؕ
وَكَانَ اللّٰهُ قَوِيًّا عَزِيْزًا (٢٦) (33: 10 - 26)

இந்த வசனங்களின் மொழியாக்கம் இவ்வாறாகும்:

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களை எதிர்த்துப் படைகள் வந்த போது, அல்லாஹ் உங்களுக்குச் செய்த அருளை நினைத்துப் பாருங்கள். அப்போது நாம் அவர்களுக்கு எதிராகக் காற்றையும் நீங்கள் காணாத படைகளையும் அனுப்பினோம். மேலும் அல்லாஹ் உங்களை செயல்களை நன்கு பார்க்கின்றான். அவர்கள் உங்களிடம் உங்களுக்கு மேலிருந்தும் (அதாவது மலை வழியாகவும்) உங்களுக்குக் கீழேயிருந்தும் (தரை வழியாகவும்) வந்த நேரத்தையும் (உங்கள்) கண்கள் பதற்றமைடைந்த நேரத்தையும், (உங்கள்) இதயங்கள் உங்கள் தொண்டைகளை அடைத்த நேரத்தையும் நீங்கள் அல்லாஹ்வைக் குறித்து

சந்தேகமான எண்ணங்களைக் கொண்ட நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்). அந்நேரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பெரும் சோதனைக்கு ஆளாக்கப்பட்டு, கடுமையான அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டனர். மேலும் அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏமாற்றத்தைத் தவிர வேறெதையும் எங்களிடம் வாக்குறுதியளிக்கவில்லை என்று நயவஞ்சகர்களும், உள்ளங்களில் நோயுடையோரும் கூறிய நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்). மேலும் அவர்களுள் ஒரு பிரிவினர், யஸ்ரிப் (மதீனா) மக்களே! (எதிரிகளை எதிர்த்து) உங்களால் நிற்க முடியாது; எனவே நீங்கள் (இஸ்லாத்தை விட்டுத்) திரும்பி விடுங்கள் எனக் கூறிய நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்). மேலும் அவர்களுள் ஒரு பிரிவினர். எங்கள் வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன எனக் கூறி, நபியிடம் அனுமதி கோரினார்கள். ஆனால், அவை (உண்மையில்) பாதுகாப்பற்ற நிலையில் இருக்கவில்லை. அவர்கள் தப்பியோடவே விரும்பினார்கள். அந்த நகரத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவர்கள் மீது படை எடுக்கப்பட்டு, பின்னர் (முஸ்லிம்களுக்கு எதிராக) குழப்பம் செய்யக் கேட்டிருந்தால் அவர்கள் உடனே அவ்வாறே செய்திருப்பர். ஆனால், அவர்கள் அந்த நகரத்)தில் (அதன் பின்னர்) சிறிது நேரமே தங்கியிருப்பர். நிச்சயமாக (நய வஞ்சகர்களாகிய) அவர்கள் ஒருபோதும் புறமுதுகு காட்டமாட்டார் என்று ஏற்கனவே அல்லாஹ்விடம் உடன்படிக்கை செய்திருந்தனர். அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கைக் குறித்துக் கட்டாயம் கேள்வி கேட்கப்படும். நீர் கூறுவீராக! மரணத்தை விட்டோ, கொலை செய்யப்படுவதை விட்டோ நீங்கள் தப்பி ஓடினால், அவ்வாறு ஓடுவது உங்களுக்கு ஒருபோதும் பயனளிக்காது. (அப்படி ஓடிய) பின்னரும் நீங்கள் எப்பயனும் பெறமாட்டீர்கள்.

நீர் கூறுவீராக! அல்லாஹ் உங்களுக்குத் தண்டனை வழங்க விரும்பினால் அவனிடமிருந்து உங்களைக் காப்பாற்றுபவன் எவன்? அல்லது அவன் உங்களுக்குக் கருணை காட்ட விரும்பினால் (அதிலிருந்து உங்களைத் தடுப்பவன் எவன்?) அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்களுக்காக எந்த நண்பரையும் எந்த உதவியாளரையும் காணமாட்டார்கள்.

உங்களுள் (மற்றவர்களைப் போரில் ஈடுபடவிடாமல்) தடை செய்பவர்களையும், தங்கள் சகோதரர்களிடம் நீங்கள் எங்களிடம் வந்து விடுங்கள் எனக் கூறுபவர்களையும் நிச்சயமாக அல்லாஹ் அறிகின்றான். அவர்கள் அறவே போருக்குச் செல்வதுமில்லை.

அவர்கள் உங்களிடம் மிகக் கருமித்தனம் காட்டுபவர் ஆவர். ஆனால் அச்சம் ஏற்படும் போது நீர் அவர்களை மரணத்தைக் கண்டு மயக்கமடைந்தவர் போன்று அவர்களின் கண்கள் சுழன்று கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் உம்மைப் பார்ப்பதாகக் காண்கிறீர். ஆனால், அந்த அச்சம் நீங்கி விடும்போது அவர்கள் (உமது) நன்மைக்குக் கருமித்தனம் உடையோராய் உங்களை கூர்மையான நாவுகளால் தாக்குகின்றனர். இவர்கள் நம்பிக்கை கொள்ளவேயில்லை. எனவே அல்லாஹ் இவர்களின் செயல்களை வீணாக்கி விட்டான். அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்.

இவர்கள் (நிராகரிப்போரின்) படைகள் (இன்னும்) சென்றுவிடவில்லை என நம்புகின்றனர். ஆனால், (நிராகரிப்போரின்) படையினர் (மீண்டும்) வந்திருந்தால் அவர்கள் நாட்டில் நாட்டுப்புற மக்களுடன் வாழவே விரும்புவர். (மேலும் நம்பிக்கையாளர்களே) உங்கள் செய்திகளைக் குறித்து மக்களிடம் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். மேலும் அவர்கள் உங்களுடன் இருந்திருந்தாலும் போர் செய்திருக்கவே மாட்டார்கள்.

அல்லாஹ்வையும் மறுமை நாளையும் (சந்திக்கப் போவதை) எதிர்பார்த்து, அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்கின்ற உங்களுக்கு அல்லாஹ்வின் திருத்தூதரிடமிருந்து மிக மேலான முன்மாதிரி உண்டு.

நம்பிக்கை கொண்டவர்கள் தாக்குதல் தொடுத்த படைகளைக் கண்டபோது, அல்லாஹ்வும், அவனது தூதரும் நம்மிடம் வாக்குறுதியளித்தது இதுவேயாகும். அல்லாஹ்வும் அவனது தூதரும் முற்றிலும் உண்மையையே கூறினர் என்று கூறினார்கள். இது அவர்களுக்கு நம்பிக்கையையும், கட்டுப்பாட்டையும் வளரச் செய்தது.

நம்பிக்கை கொண்டவர்களுள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திய மனிதர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் (தாங்கள் போர் செய்து மரணமடைய வேண்டும் என்ற) தங்கள் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர். அவர்களுள் மற்றுஞ்சிலர் (இன்னும் அதனை) எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் (தங்கள் எண்ணத்தில்) சிறிதும் மாற்றம் ஏற்படுத்தவில்லை.

இதன் பயனாக அல்லாஹ் உண்மையாளர்களுக்கு அவர்களின் உண்மைக்கு நற்பலன் வழங்குவான். மேலும் அவன் நாடினால் நயவஞ்சகர்களுக்குத் தண்டனை வழங்குவான்; அல்லது அவர்களை மன்னிப்பான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.

அல்லாஹ் நிராகரிப்பாளர்களை அவர்களது கோபத்துடன் திருப்பி விட்டான். அவர்கள் எந்த நன்மையையும் பெறவில்லை. அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு போரில் போதுமானவனாக இருந்தான். அல்லாஹ் ஆற்றல் மிக்க வல்லவனுமாவான்.

இது திருக்குர்ஆன் வசனங்களின் மொழியாக்கமாகும்.

போருக்கு இந்தப் பெயர் ஏன் வைக்கப்பட்டது? போருக்கான காரணம்: இந்தப் போரை அகழ்ப் போர் என்றும் கூறப்படுகின்றது. ஏனெனில், அரேபியர்களின் சட்டத்திட்டம் மற்றும் நடைமுறைக்கு எதிராக முதல் முறையாக முஸ்லிம்கள் அகழ்களைத் தோண்டி தற்காப்புப் போர் புரிந்தார்கள். மேலும் இந்தப் போர் அஹ்ஸாப் போர் என்றும் கூறப்படுகின்றது. திருக்குர்ஆனும் அதற்கு இந்தப் பெயரை வழங்கியுள்ளது. அஹ்ஸாப் என்பது ஹிஸ்புடைய பன்மையாகும். அதன் பொருள் ஜமாஅத் மற்றும் கூட்டம் என்பதாகும். இந்தப் போரில் பல்வேறு ஜமாஅத்கள் மற்றும் கூட்டங்கள் ஒன்றிணைந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்திருந்தன. எனவே இந்தப் போர் அஹ்ஸாப் போர் என்று அழைக்கப்பட்டுள்ளது.




அதற்கான காரணம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது. அதாவது, ரபீயுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ நான்காம் வருடம் யூதக் கோத்திரமான பனூ நழீரானது தனது உடன்படிக்கையை மீறுதல், கிளர்ச்சி செய்தல் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கான முயற்சி செய்தல் போன்ற சதித் திட்டங்களின் காரணமாக மதீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார்கள். உடன்படிக்கையை மீறி கிளர்ச்சி செய்த அந்த சமுதாயத்திற்கான தண்டனை என்பதோ உள்ளபடியே இதை விட அதிகம் கடுமையானது. ஆனால், அவர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்து, கருணை காட்டியவாறு அவர்களை நாடு கடத்திவிட்டார்கள். அதனால் இந்தக் கோத்திரம் தனது அனைத்து பொருட்களையும் எடுத்துக் கொண்டு மதீனாவில் இருந்து சற்று தொலைவில் சென்று கைபரில் குடியேறி விட்டது. ஆயினும், தற்போது நான்கு மாதம் கூட கழிந்திருக்கவில்லை அதற்குள் நன்றியை மறந்தும், சதிச் செயலில் ஈடுபட்டவாறும் யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் இஸ்லாத்திற்கு எதிராக எப்படிப்பட்ட அபாயகரமான சதித் திட்டத்தை தீட்டினார்கள் என்றால், அதன்படி முஸ்லிம்கள் முழுமையாக அழிந்து போயிருப்பார்கள். ஆணவம், அகந்தை மற்றும் இஸ்லாத்திற்கு எதிரான பகைமை மற்றும் ஆக்ரோஷம் ஆகியவற்றின் காரணமாக யூதர்களின் அபூஜஹல் என்றழைக்கப்படுவதற்கு தகுதியான பனூ நழீருடைய தலைவன் ஹூய்யை பின் அக்தப் ஒரு சதித் திட்டத்தின் கீழ் தனது தலைமையிலான குழுவினருடன் மக்காவிற்கு சென்றான். மேலும் அபூஸூஃப்யான் மற்றும் குறைஷியத் தலைவர்களை சந்தித்தான். மேலும் நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம் என்று குறைஷிகளிடம் அவன் கூறினான். நாங்கள் முஹம்மது (ஸல்) மற்றும் அவர்களுடைய தோழர்களின் பெயரையும், அடையாளத்தையும் அழிப்பதற்கு உறுதிபூண்டுள்ளோம் ; நாம் அனைவரும் இணைந்து முஹம்மது (ஸல்) மற்றும் அவருடைய தோழர்களுக்கு எதிராக ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம் என்று அவன் கூறினான். இணை வைப்பாளர்களுக்கு வேறு என்ன வேண்டும்? அவர்களோ ஏற்கனவே இந்த கொலைகார எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர். மேலும், பத்ர் மற்றும் உஹது போன்ற போர்களை செய்திருந்தனர். எனினும் அவர்களின் மனவிருப்பங்கள் முழுமையடையாமல் இருந்தன. பத்ர் போருக்கான பழிவாங்குதல் மற்றும் உஹது போரில் ஏற்பட்ட வெட்கத்தின் காயங்களிலிருந்து அவர்கள் தற்போது மீண்டும் புத்துயிர் பெற்றனர். அபூஸூஃப்யான் பனூ நழீர் கோத்திரத்தின் அந்த தலைவர்களை வரவேற்றவாறு இவ்வாறு கூறினார்: நீங்கள் உங்களது வீடுகளுக்கு வந்துள்ளீர்கள். மேலும் அனைத்து மக்களிலும் எங்களின் மிகவும் நேசத்திற்குரியவர் யாரென்றால், எவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதான பகைமையில் எங்களுக்கு உதவி

செய்வாரோ அவரே ஆவார். பரஸ்பர கலந்துரையாடலுக்குப் பிறகு குறைஷிகளின் ஐம்பது நபர்களும், அந்த யூதர்களும் கஅபத்துல்லாஹ்வின் திரைசீலையைப் பிடித்தவாறு உறுதியான உடன்படிக்கை செய்தவாறு நாங்கள் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வோம்; மேலும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம் ; மேலும் நாம் அனைவரும் இணைந்து முஹம்மது (ஸல்) அவர்களையும் மற்றும் அவர்களது தோழர்களையும் முற்றிலும் அழித்து விடுவோம் என்றும் சத்தியம் செய்தனர்.

எவ்வாறு இருப்பினும், அபூஸுஃப்யானுடன் இணைந்து மதீனாவின் மீது ஒரு வலிமையான தாக்குதலை நடத்துவதற்கான திட்டத்தையும், தேதியையும் முடிவு செய்த பிறகு பனூ நழீர் கோத்திரத்தைச் சேர்ந்த இந்தக் குழுவினர் அரேபியாவின் மற்ற கோத்திரங்களின் பக்கம் சென்றது. மேலும் அவர்களோ முஸ்லிம்களின் இரத்தத்தின் மீது தாகம் கொண்டவர்களாக ஆகிக் கொண்டிருந்தனர். மேலும், ஒரு தோல்வியுற்ற தாக்குதலையும் நடத்தியிருந்தனர். ஆக, முதன் முதலில் அவர்கள் பனூ ஃகத்ஃபானிடம் சென்றனர். இந்தக் கோத்திரம் அரேபியாவில் ஒரு வீரமிக்க கோத்திரங்களில் ஒன்றாக கணக்கிடப்பட்டு வந்தது. மேலும் முஸ்லிம்களுக்கு எதிராக பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் அதிகம் கொண்டிருந்தது. யூதர்கள் இவர்களை இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் போரிடுவதற்கு அழைப்புக் கொடுத்தனர். மேலும், அத்துடன் கைபருடைய ஒரு வருட பேரீத்தம் பழ விளைச்சலை வழங்குவதாகவும் பேராசையூட்டினர். மேலும், மக்கத்து குறைஷிகளும் நமக்கு ஆதரவாக இருக்கின்றனர் என்றும் கூறினர். எனவே பனூ ஃகத்ஃபான் கோத்திரமும் ஆதரவளிப்பதாக வாக்குறுதி கொடுத்து விட்டது. மேலும் தம் புறமிருந்து ஆறாயிரம் போர் வீரர்களைக் கொண்ட படைக்கான உத்திரவாதமும் கொடுத்தது. இதன் பிறகு யூதர்களின் இந்தக் கோத்திரம் பனூ ஸுலைம் கோத்திரத்திடம் சென்றது. இது ஏற்கனவே முஸ்லிம்களின் மீது தாக்குதல் நடத்துவதற்கான உறுதியான எண்ணம் கொண்டிருந்த மற்றொரு கோத்திரமாக இருந்தது. ஆனால் அவர்களின் திட்டம் தோல்வியுற்றிருந்தது. இவ்வளவு பெரிய கூட்டுப் படையினரின் தாக்குதலைக் குறித்த தகவல் அந்தக் கோத்திரத்திற்கு கிடைத்த பிறகு அவர்களும் மகிழ்ச்சியுடன் அதற்கு உடன்பட்டு விட்டனர். (ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், தொகுதி 4, பக்கம் 363 -364, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு)

இதேபோன்று பனூ ஃபஸாரஃ கோத்திரம் தனது தலைவரான உயைய்னா என்பவனின் தலைமையில் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் போரிடுவதற்கு ஆயத்தமாகி விட்டது. மேலும் உயைய்னா தனது நட்புக் கோத்திரமான பனூ அஸதிற்கு அழைப்பு விடுத்தான். ஆக, பனூ அஸதுடைய தலைவன் துலைஹா அஸதி என்பவனும் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு விட்டான். மேலும் முர்ரஃ மற்றும் பனூ ஸஜஃ கோத்திரங்களும் இந்த போரின் படை வீரர்களின் பலத்தில் சிறப்பான அதிகரிப்பை ஏற்படுத்தியது. இந்த அனைத்து கோத்திரங்களும் தமது வீரத்தில் முழு அரேபியாவிலும் (தங்களுக்கான) ஒரு பெயரை பெற்றிருந்தன. (ஸீரத் என்ஸைக்லோபீடியா, தொகுதி 7, பக்கம் 270 - 271, தாருஸ்ஸலாம் ரியாழ்)

இதன் விளக்கத்தை எழுதியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

மக்கத்து குறைஷிகளும், நஜத் கோத்திரங்களான ஃகத்ஃபான் மற்றும் ஸுலைம் கோத்திரமும் ஏற்கனவே முஸ்லிம்களின் இரத்தத்தின் மீது தாகம் கொண்டவர்களாக இருந்தனர். மேலும் அனுதினமும் மதீனாவிற்கு எதிராக தாக்குதல் தொடுப்பதற்கான சிந்தனையில் இருந்து வந்தனர். ஆயினும், அப்போது வரை அவர்கள் தங்களது சக்திகளை இஸ்லாத்திற்கு எதிராக ஒரு மைதானத்தில் ஒன்றுதிரட்ட முடியாமல் இருந்தனர். ஆனால், யூத கோத்திரமான பனூ நழீருடைய மக்கள் தமது நம்பிக்கைத் துரோகம் மற்றும் குழப்பம் விளைவித்தல் போன்றவற்றின் காரணமாக மதீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட பிறகு அவர்களுடைய தலைவர்கள் அந்த கண்ணிய மிக்க இன்னும் கூறப்போனால் அந்த கருணை மிகுந்த நடத்தையை மறந்து விட்டனர். அந்த நடைமுறையோ அவர்கள் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்திருந்த மாபெரும் கருணையாக இருந்தது. அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட அந்த (கருணை மிகுந்த) நடைமுறையை மறந்து தங்களுக்குள் பரஸ்பரம் இந்த திட்டத்தை தீட்டினர். அதாவது, அரேபியாவின் பிரிந்து கிடந்த அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி இஸ்லாத்தை அழிப்பதற்காக முயற்சி செய்ய வேண்டும் என்று அவர்கள் சதித் திட்டம் வகுத்தனர். யூதர்களோ மிகவும் புத்திக் கூர்மை உடையவர்களாகவும், தந்திரசாலிகளாகவும் இருந்தனர். மேலும் இது போன்ற சதித்திட்டங்களை தீட்டுகின்ற பணிகளில் மிகவும் புலமைப் பெற்றிருந்தார்கள். எனவே அவர்களுடைய குழப்பம் மிகுந்த முயற்சிகள் வெற்றியடைந்தன. மேலும் அரேபிய கோத்திரங்கள் ஓர் உயிராய் ஒன்று திரண்டு முஸ்லிம்களுக்கு எதிராக மைதானத்திற்கு புறப்பட்டு வந்தன. யூதத் தலைவர்களில் ஸல்லாம் பின் அபீயுல் ஹகீக், ஹுயைய் பின் அக்தப் மற்றும் கினானாஃ பின் அர்ரபீஃ ஆகியோர் (முஸ்லிம்களுக்கு எதிராக மக்களை) தூண்டி விடுகின்ற பணியில் முக்கிய பங்கு வகித்தனர். ஆக, குழப்பவாதிகள் தமது புதிய தேசமான கைபரில் இருந்து வெளியேறி ஹிஜாஸ் மற்றும் நஜதுடைய கோத்திரத்தார் மத்தியில் சுற்றுப் பயணம் செய்தனர். மேலும், முதன் முதலில் மக்காவை சென்றடைந்து குறைஷிகளை தங்களுடன் இணைத்துக் கொண்டனர். மேலும் குறைஷியத் தலைவர்களை மகிழ்ச்சியூட்டுவதற்காக முஸ்லிம்களின் மார்க்கத்தை விட உங்களது மார்க்கம் (இணை வைத்தல் மற்றும் சிலை வணக்கம்) சிறந்ததாகும் என்று கூறுவதற்கு கூட அவர்கள் தயங்கவில்லை. இதனை அவர்கள் அந்த மக்களிடம் கூறினர்.

இதன் பிறகு அவர்கள் நஜதிற்கு சென்று, ஃகத்ஃபான் கோத்திரத்தை தங்களுடன் இணைத்துக் கொண்டனர். மேலும் அக்கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான ஃபஸாரஃ மற்றும் அஷ்ஜஅ போன்றவற்றை தங்களுடன் புறப்படுவதற்கு ஆயத்தப்படுத்தினர். பின்னர் குறைஷிகள் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரத்தினரின் தூண்டுதலினால் பனூ ஸுலைம் மற்றும் பனூ அஸத் கோத்திரத்திரத்தாரும் இஸ்லாத்திற்கு எதிரான கூட்டணியின் அங்கமாகிவிட்டனர். மேலும் மற்றொரு பக்கம், யூதர்கள் தங்களது நட்புக் கோத்திரமான பனூ அஸதிற்கு தூதுச் செய்தி அனுப்பி தமது உதவிக்காக அணிதிரள செய்து விட்டனர். இந்த வலிமையான கூட்டணி தவிர, தமது சுற்றுவட்டாரக் கோத்திரங்களில் இருந்து தங்களுக்கு ஆதரவாக இருந்த ஏராளமான மக்களை தங்களுடன் இணைத்துக் கொண்டனர். மேலும், பின்னர் முழுமையான தயாரிப்பிற்கு பிறகு அரேபிய பாலைவனத்தில் கொலை வெறிபிடித்த இந்த கோத்திரங்கள் முஸ்லிம்களை அழித்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு மாபெரும் அலையைப் போன்று மதீனாவின் மீது பாய்ந்து வந்தன. மேலும், இஸ்லாத்தை உலகத்திலிருந்தே ஒழித்து விடாத வரை நாங்கள் திரும்பி வர மாட்டோம் என்று உறுதி கொண்டிருந்தனர். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 573 - 574)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

யூதர்களின் இரண்டு கோத்திரத்தினர் இருந்தனர். அவர்களோ போர், குழப்பம் விளைவித்தல், கொலை மற்றும் கொலை செய்வதற்கான சதித் திட்டம் தீட்டுதல் போன்றவற்றின் காரணமாக மதீனாவில் இருந்து நாடு கடத்தப்பட்டிருந்தனர். அவர்களில் பனூ நழீர் கோத்திரத்தின் சில பகுதியினரோ சிரியாவின் பக்கம் ஹிஜ்ரத் செய்து சென்றனர். மேலும் சில பகுதியினர் மதீனாவின் வடக்குப் பக்கம் கைபர் என்ற பெயர் கொண்ட ஒரு நகரத்தை நோக்கி ஹிஜ்ரத் செய்தனர். அரேபியாவில் கைபர் நகரம் யூதர்களின் ஒரு மாபெரும் தலைமையகமாக இருந்தது. மேலும் ஒரு கோட்டையால் சூழ்ந்த நகரமாக இருந்தது. இங்கு சென்று பனூ நழீர் கோத்திரத்தார் முஸ்லிம்களுக்கு எதிராக அரேபியர்களுக்கு மத்தியில் கோபத்தை பரப்பத் துவங்கி விட்டனர். மக்காவாசிகளோ முதலிலேயே எதிரிகளாக இருந்தனர். அவர்கள் மேலும் தூண்டி விடுவதலுக்கு தேவையற்றவர்களாக இருந்தனர். இதே போன்று, ஃகத்ஃபான் என்ற பெயர் கொண்ட நஜத் கோத்திரம் அரேபிய கோத்திரங்களில் மிகவும் செல்வாக்கு படைத்ததாக இருந்தது. அதுவும் மக்காவாசிகளின் நட்பினால் இஸ்லாத்தின் மீது பகைமை கொண்டிருந்தது.

தற்போது யூதர்கள், குறைஷிகள் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரத்தினருக்கு உத்வேகம் கொடுத்து மட்டுமின்றி பனூ ஸுலைம் மற்றும் பனூ அஸதையும் மேலும் இரு வலிமையான கோத்திரங்களையும் இஸ்லாத்திற்கு எதிராக திரண்டு எழச் செய்தனர். மேலும் இதேபோன்று பனூ ஸஅத் என்ற பெயர் கொண்ட யூதர்களின் நட்புக் கோத்திரத்தையும் நிராகரிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்படுவதற்கு ஆயத்தப்படுத்தினர். ஒரு நீண்ட கால தயாரிப்புக்கு பிறகு

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அரேபியாவின் அனைத்து வலிமை மிக்க கோத்திரங்களும் ஒரு பொதுக் கூட்டணிக்கு அடித்தளம் அமைத்து விட்டன. அதில் மக்காவின் மக்களும் அடங்கியிருந்தனர். மக்காவின் சுற்றுப் புறத்தில் இருந்த கோத்திரங்களும் இருந்தன. மேலும் நஜத் மற்றும் மதீனாவின் வடக்குப் பக்கம் இருந்த பகுதிகளின் கோத்திரங்களும் அடங்குவர். மேலும் யூதர்களும் அடங்குவர். இந்த அனைத்து கோத்திரங்களும் இணைந்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்காக ஒரு வலிமையான படையை ஆயத்தப்படுத்தினர். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 267)

குறைஷியர்களும் மற்றும் ஏனைய கோத்திரங்களும் இந்த போருக்காக புறப்பட்டது தொடர்பாகவும், அவர்களின் எண்ணிக்கையைக் குறித்தும் கூடுதல் விளக்கங்கள் இவ்வாறு வருகின்றன:

மக்கத்து குறைஷிகள் நான்காயிரம் படைகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டனர். அதற்கு அபூஸுஃப்யான் தலைமை வகித்துக் கொண்டிருந்தார். காலித் பின் வலீத் சவாரிகளை வழிநடத்திக் கொண்டிருந்தார். குறைஷிகளின் ஆலோசனைக் கூடமான தாருன் நத்வாவில் அவர்கள் கொடியைக் கட்டினர். மேலும் அதனை உஸ்மான் பின் தல்ஹா ஏந்திப் பிடித்தார்.இவர் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். மேலும் தம்முடன் மூன்று குதிரை சவாரிகளை அழைத்துக் கொண்டார். மேலும் அவருடன் ஆயிரத்தி நூறு ஒட்டக சவாரிகள் இருந்தனர். பனூ ஸுலைம் கோத்திரத்தின் எழுநூறு நபர்கள் குறைஷிகளுடன் சென்று இணைந்து கொண்டனர். அவர்களுக்கு தற்போது ஸுஃப்யான் பின் அப்தே ஷம்ஸ் தலைமை தாங்கிக் கொண்டிருந்தான். பனூ அஸத் துலைஹா பின் குவைலைதுடைய தலைமையில் புறப்பட்டனர். மேலும் பனூ ஃபஸாராஃ கோத்திரத்தைச் சேர்ந்த ஓராயிரம் நபர்கள் புறப்பட்டனர். அவர்களுக்கு உயைய்னா பின் ஹிஸன் தலைமை தாங்கிக் கொண்டிருந்தான். பனூ அஷ்ஜஃவின் நானூறு நபர்கள் புறப்பட்டனர்.மேலும் அவர்களுடைய தலைவனாக மஸூது பின் ருகைலா இருந்தான். பனூ முர்ரஃவை சேர்ந்த நானூறு நபர்கள் புறப்பட்டனர். மேலும் ஹாரிஸ் பின் அவ்ஃப் முர்ரீ என்பவன் அவர்களுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தான். பனூ ஃகத்ஃபான் சார்பாக ஆறாயிரம் படைகளை அனுப்புவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் யூதர்களின் சார்பாக இரண்டாயிரத்திற்கும் கூடுதலான போர்படைகள் அனுப்பப்படுவதற்கான வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. அது இந்த பெரும் படைகளுக்குப் பின்னால் ஓர் இறுதி தாக்குதல் தொடுப்பதற்கு தயாராக இருக்கும் என்றும் கூறப்பட்டிருந்தது. மேலும் இவ்வாறு பல்வேறு கோத்திரங்களின் மக்கள் இந்தப் போரில் கலந்து கொண்டிருந்தனர். அவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் பத்தாயிரமாகும். மேலும் சில அறிவிப்புகளின் அடிப்படையில் ஏறத்தாழ இருபதாயிரம் இருந்தது. இவர்கள் அனைவருக்கும் அபூஸுஃப்யான் பின் ஹார்ப் தலைமை வகித்துக் கொண்டிருந்தார். இந்தப் படை அந்த நேரம் வரை அரேபிய வரலாற்றின் மாபெரும் போர் படையாக இருந்தது. (முஹம்மது ஹுஸைன் ஹைகல் அவர்களுடைய நூல் - ஹயாதே முஹம்மது (ஸல்), பக்கம் 434, புக் கார்னர் ஜெஹல்லம் பதிப்பு)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இது குறித்து எழுதுகின்றார்கள்:

நிராகரிப்பாளர்களின் இந்த மாபெரும் படையின் எண்ணிக்கை ஒரு அனுமானத்தின் அடிப்படையில் சுமார் பதினைந்தாயிரம் முதல் இன்னும் கூறப்போனால் சில அறிவிப்புகளின் அடிப்படையில் இருபத்தி நான்காயிரம் வரை என்று கூறப்படுகின்றது. பத்தாயிரம் எனும் அனுமானத்தையே சரியானதாக எடுத்துக் கொண்டாலும் கூட அக்காலத்தின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை எவ்வளவு பெரியதாக இருந்தது என்றால், அதற்கு முன்னர் அரேபிய கோத்திரங்களின் போர்களில் இவ்வளவு பெரிய எண்ணிக்கை எந்தவொரு போரிலும் பங்கு பெற்றிருக்காது. அனைத்துப் படைகளின் பெரும் தலைவராக அதாவது படைத் தளபதியாக அபூஸுஃப்யான் பின் ஹர்ப் இருந்தார். உணவுப் பொருட்கள் மற்றும் போர் ஆயுதங்களும் கூட எல்லா வகையிலும் போதுமானதாகவும் பெருமளவிலும் இருந்தன. இவ்வாறு இந்தப் படை ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு ஷவ்வால் மாதம், கி.பி 627-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மதீனாவை நோக்கி முன்னேறத் துவங்கியது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் - பக்கம் 574)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எடுத்துரைக்கின்றார்கள்:

பல்வேறு வரலாற்றாசிரியர்கள் இந்தப் படையினரின் எண்ணிக்கை குறித்து பத்தாயிரம் முதல் இருபத்தி நான்காயிரம் வரை இருக்கும் என்று அனுமானம் செய்துள்ளனர். ஆனால், முழு அரேபியாவின் ஒன்றுகூடலின் விளைவு வெறும் பத்தாயிரமாக இருந்திருக்க முடியாது என்பது வெளிப்படையாகும். நிச்சயமாக இருபத்தி நான்காயிரம் என்பது மிகவும் சரியானதாக இருக்கின்றது. மேலும் வேறு எதுவும் இல்லையென்றாலும் கூட பதினெட்டாயிரம் அல்லது இருபதாயிரம் நிச்சயமாக இருக்கும். மதீனா என்பது ஒரு சாதாரண ஊராக இருந்தது. அந்த ஊருக்கு எதிராக முழு அரேபியாவின் படையெடுப்பு என்பது எந்தவகையிலும் சாதாரண விஷயமாக இருக்கவில்லை. மதீனாவின் அனைத்து ஆண்களையும் சேர்த்து வெறும் மூவாயிரம் நபர்களே (போருக்கு) புறப்பட்டிருக்க முடியும். (இதில் வயோதிகர்கள், இளைஞர்கள், சிறுவர்களும் அடங்குவர்) இதற்கு எதிரில் எதிரியின் படை வீரர்களின் எண்ணிக்கை இருபதாயிரம் மற்றும் இருபத்தி நான்காயிரத்திற்கு இடைப்பட்டதாக இருந்தது. பின்னர் அதுமட்டுமல்ல அவர்களில் அனைவருமே போர் வீரர்களாக இருந்தனர். இளைஞர்களாகவும், போர் புரிவதற்கு தகுதி படைத்தவர்களாகவும் அவர்கள் அனைவரும் இருந்தனர். ஏனெனில், நகரத்தில் இருந்து கொண்டு பாதுகாப்பிற்கான கேள்வி எழும்போது பின்னர் அதில் சிறுவர்களும், வயோதிகர்களும் கூட கலந்து கொண்டு விடுகின்றனர். ஆனால், தொலைவில் இருக்கும் இடத்திற்கு படையெடுத்து செல்கின்ற போது, பின்னர் அதில் இளைஞர்களும், வலிமையான ஆண்களுமே பங்குபெறுவர்.

எனவே இந்த விஷயம் உறுதியானதாகும். அதாவது, நிராகரிப்பாளர்களின் படையில் இருபதாயிரம் அல்லது இருபத்தி ஐந்தாயிரம் பேர்; எவ்வளவு நபர்கள் போர் வீரர்களாக இருந்தார்களோ அவர்கள் அனைவருமே வலிமையானவர்களாகவும், இளைஞர்களாகவும் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். ஆனால், மதீனாவின் மொத்த ஆண்களின் எண்ணிக்கை சிறுவர்கள் மற்றும் முதியோரையும் சேர்த்து அரிதாக மூவாயிரம் நபர்கள் இருந்திருப்பர். இந்த விஷயங்களை கருத்தில் கொண்டவாறு மதீனாவின் படையின் எண்ணிக்கை மூவாயிரமாக இருந்தது என்று புரிந்து கொண்டால் பின்னர் எதிரியின் எண்ணிக்கையை நாற்பதாயிரம் என்று கருத வேண்டும் என்பது வெளிப்படையாகும். ஏனெனில், எவ்வகையிலும் ஒப்பீடே பொருத்தமற்றதாக இருந்தது. எதிரியின் படையின் எண்ணிக்கை இருபதாயிரம் என்று கருதப்பட்டால் பின்னர் மதீனத்து படைவீரர்களின் எண்ணிக்கை வெறும் ஆயிரத்தி ஐநூறு என்றே கருத வேண்டும். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி 20, பக்கம் 267 -268) ஏனெனில் அவர்களில் பலவீனமான மக்களும் இருந்தனர்.

எவ்வாறு இருப்பினும், நிராகரிப்பாளர்கள் போர் புரியும் எண்ணத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தனர். மேலும் இதற்கான தகவல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. அந்நேரத்தில் அகழ் தோண்டப்பட வேண்டும் என்று அன்னார் (ஸல்) முடிவெடுத்தார்கள். அதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒற்றர்படைத் துறை அதாவது உளவுத் துறையும் இந்த அனைத்து நிலவரங்களையும் அறிந்திருந்தது. மேலும் நாலாப்புறமிருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்துக் கொண்டிருந்தது. குறைஷிகள் மற்றும் யூதர்களுடைய இந்த அபாயகரமான சதித் திட்டத்தைக் குறித்த தகவல் மதீனாவை வந்தடைந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை ஒன்று கூட்டினார்கள். மேலும், எதிரிகளின் தீய திட்டத்தைக் குறித்து அவர்களுக்கு தகவல் கொடுத்தார்கள். மேலும், மதீனாவில் இருந்து வெளியேறி போரிடலாமா? அல்லது அங்கு இருந்து கொண்டு அவர்களுடன் போரிடலாமா? என்று அவர்களிடம் ஆலோசனை செய்தார்கள். ஒரு மாபெரும் இராணுவப் படை மற்றும் அதற்கெதிரில் பெரும் எண்ணிக்கையை கருத்தில் கொண்டவாறு பெரும்பாலான கருத்துகள் இவ்வாறே முன்வந்தன. அதாவது மதீனாவில் இருந்தவாறே எதிர்கொள்வதே மிகவும் உகந்ததாக இருக்கும் என்ற கருத்துகளே முன்வந்தன. அறிவிப்புகளின் அடிப்படையில், ஹஸ்ரத் ஸல்மான் (ரலி) அவர்களுடைய ஆலோசனையைப் பற்றி குறிப்பு கிடைக்கின்றது. அதாவது, அன்னார் (ரலி) தான் அகழ் தோண்டுவதற்கான ஆலோசனை வழங்கினார்கள். மேலும், அன்னார் (ரலி) கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் பாரசீக மண்ணில் குதிரைப் படைகளிடம் அச்சம் கொள்ளும்போது, பின்னர் அவர்களுக்கு முன்னால் அகழ் தோண்டி வந்தோம். அதாவது குதிரைப் படைகள் வந்தபோது, அகழ் தோண்டி வந்தோம். அதன் காரணமாக அவர்களால் அதனை தாண்டி செல்வதற்கு அவர்கள் ஆற்றல் பெற்றிருக்கவில்லை என்று அன்னார் (ரலி)

கூறினார்கள். ஆக, இந்தக் கருத்து அனைவருக்கும் நல்லதாக பட்டது. மேலும், மதீனாவிற்குள் இருந்து கொண்டு எதிரியை) எதிர் கொள்வதற்கு ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தீர்மானித்தார்கள். மேலும், அகழ் தோண்டுவதற்கு கட்டளை வழங்கினார்கள்.

சில வாழ்க்கை வரலாற்று நூல்களில் இருந்து இந்த விஷயம் தெரிய வருகின்றது: அதாவது, அகழ் தோண்டுவதற்கான முடிவு என்பது வெறும் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் ஆலோசனையின் காரணமாக மட்டும் எடுக்கப்படவில்லை. மாறாக, அல்லாஹ் இல்ஹாம் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த வழிமுறையை பற்றி கூறியிருந்தான். ஏனெனில், அரேபியர்களுக்கு இந்த வழிமுறை முற்றிலும் புதிதாக இருந்தது. அவர்கள் தற்காப்பு அகழ்கள் தோண்டுவதற்கான வழிமுறையைப் பற்றி அறியாதவர்களாக இருந்தனர்.

ஆக, இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அபூஸுஃப்யான் அதிகார போதையில் நிறைந்திருந்த ஒரு பெரும் படையை அழைத்துக் கொண்டு மதீனாவை நோக்கி படையெடுத்து வந்தான். அவனுக்கு மதீனாவின் புறமிருந்து எந்தத் தடையும் தென்படவில்லை ; மேலும், அவனுக்கு எந்த இஸ்லாமியப் படையும் தென்படவில்லை. எனவே ஏற்கனவே அவனுக்கு தனது ஒரு மாபெரும் படையின் மீது இந்த கர்வம் இருந்தது. அதாவது, இன்று மதீனாவாசிகளை தங்களின் கைகளில் இருந்து எவராலும் காப்பாற்ற முடியாது என்ற ஆணவம் இருந்தது. எனவே அவன் கூறினான்: இப்போதோ நான் மதீனாவை அழித்து விட்டே செல்வேன். மேலும், மதீனா வரை வழிப்பாதையில் எங்கேயும் எந்த எதிர்ப்பும், தடையும் அவனுக்கு தென்படாத வரை அவன் ஆணவத்திலும், கர்வத்திலும் மேலும், மேலும் முன்னேறிக் கொண்டே இருந்தான். ஆனால், அவன் தனது குதிரைகளை ஓட்டியவாறு சரியாக மதீனாவிற்கு முன்னால் சென்றடைந்த போது, திடீரென தனக்கு முன்னால் ஐந்து கி.மீ நீளமும், எட்டு அடி ஆழமும், அகலமும் கொண்ட அகழ்களைக் கண்டு அவனது மூளை செயலிழந்து விட்டது. இந்த அகழ்கள் எவ்வளவு அழமானவையாகவும், அகலமானவையாகவும் இருந்தன என்றால், குதிரைகளைக் கொண்டு அதனை கடப்பதும் கூட சாத்தியமற்றதாக இருந்தன.

ஆக,இந்த மக்கள் இந்த அகழ்களைக் கடந்து செல்வதில் தோற்று விட்டபோது தமது கடுமையான கோபம், இயலாமை, ஆணவம் மற்றும் அகந்தையின் உணர்வுகளால் அவன் அங்கிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் அவன் இவ்வாறு எழுதினான்: லாத், உஸ்ஸா, இஸாஃப், நாயிலா மற்றும் ஹுபுல் தெய்வங்களின் மீது ஆணையாக! நான் எனது படையுடன் வந்துள்ளேன்; உங்களது பெயரையும், அடையாளத்தையும் அழித்து விடாத வரை நான் திரும்பி செல்ல மாட்டேன். ஆனால், நான் காண்கிறேன்; நீங்கள் எதிர்த்து போரிடுவதற்கு தயங்குகின்றீர்கள். மேலும் உங்களை சுற்றி அகழ்களை தோண்டி வைத்துள்ளீர்கள். இந்த வழிமுறையை உங்களுக்கு எவர் கூறினார் என்பதை நான் அறிந்திருக்க வேண்டுமே! ஒருவேளை நாங்கள் திரும்பி சென்று விட்டாலும் கூட நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள்! உஹது போர் நாளை உங்களுக்கு மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தி விடுவோம்; அதில் இனி உங்களது பெண்களும் கூட பலியிடப்படுவார்கள்.

இந்தக் கடிதத்தை அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு அனுப்பியிருந்தான்.

இதற்கான பதிலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஸுஃப்யானிற்கு எழுதினார்கள். மேலும், அதில் கூறினார்கள்: உமது கடிதம் கிடைத்தது; நீர் நீண்ட காலமாக அல்லாஹ்விற்கு எதிரில் ஆணவத்தில் மூழ்கியுள்ளீர் என்பதை நான் அறிவேன். மேலும் நீர் மதீனாவின் மீது உமது பெரும் படையுடன் எப்படிப்பட்ட தாக்குதல் நடத்தப் போவதாக குறிப்பிட்டுள்ளீர் என்றால் அதன் மூலம் நீங்கள் எங்களது பெயரையும், அடையாளத்தையும் அழித்து விடுவதாக உறுதிபூண்டுள்ளீர். உமது அசுத்தமான எண்ணங்களுக்கு மத்தியில் தடையாக வந்திருப்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். எனவே உமக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைக்க முடியாது.இது அல்லாஹ்வின் கட்டளையாகும். பின்னர் எழுதினார்கள்: அவன் தனது முடிவை எடுத்து விடுவான். அதாவது, நீங்கள் லாத், உஸ்ஸாவின் பெயரை மறந்து விடும் அளவில் அவன் தனது முடிவை எடுத்து விடுவான். மேலும், அகழ் தோண்டும்படி எனக்கு யார் கூறியது? என்று நீர் கேட்டுள்ளீர்! فَاِنَّ اللّٰهَ اَلْهَمَنِیْ ذَالِکَ என்பது அதற்கான பதிலாகும். அதாவது இந்த வழிமுறையை எனக்கு அல்லாஹ் இல்ஹாம் மூலமாக கூறினான். உம்முடைய மற்றும் உமது கூட்டாளிகளுடைய கோபமும், ஆத்திரமும் அதிகரித்து விட்ட போது, அந்நேரத்தில் எனக்கு அல்லாஹ் இதனை கூறிவிட்டான். மேலும் கேளும்!

அன்னார் (ஸல்) இவ்வாறு அதில் எழுதினார்கள்.

கேளும்! இறுதியில் இறைவன் எங்களை வெற்றி பெறச் செய்வான். மேலும் காலிபுடைய முட்டாள் மக்களே! நினைவிற் கொள்ளுங்கள்! ஒரு நாள் வரும்; அன்று உங்களுடைய லாத்தும், உஸ்ஸாவும், இஸாஃபும், நாயிலாவும், ஹுபுலும் துண்டு துண்டாக்கப்பட்டு விடும். மேலும் அந்நாளில் உமக்கு இந்த எல்லாவற்றையும் நினைவூட்டுவேன். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 364, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு)

ஆக, இன்ஷா அல்லாஹ் எங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று மிகவும் தெளிவான முறையில் அவனுக்கு அன்னார் (ஸல்) எழுதினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்தக் கடிதத்தில் இருந்து இந்த விஷயம் தெளிவாகின்றது. அதாவது கண்டிப்பாக ஹஸ்ரத் ஸல்மான் (ரலி) அவர்களும் ஆலோசனை வழங்கியிருப்பார்கள். ஆனால், அதன்படி செயல்படுவதற்கான முடிவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இல்ஹாமின் அடிப்படையிலேயே எடுத்திருப்பார்கள். வல்லாஹு அஃலம்.

எவ்வாறு இருப்பினும் அன்னாருடைய ஆலோசனையாகவும் இருந்தது. ஆனால், அல்லாஹ்வும் அன்னாருக்கு இது குறித்து அறிவித்தான். எஞ்சிய விளக்கங்கள் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

இன்றைய நாட்களில் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக குறிப்பாக துஆக்களில் நினைவு வையுங்கள். பாகிஸ்தானிய அஹ்மதிகளும் சுயமே துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். ஸதக்கா கொடுப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக! மேலும் எதிரிகளின் தீங்கிலிருந்து அவர்களை பாதுகாப்பானாக! மேலும் கயவர்களின் தீங்கை அவர்களின் பக்கமே திருப்பி விடுவானாக! பொதுவாக உலகின் நன்மைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் உலகையும் கூச்சல் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பானாக! (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், செப்டம்பர் 27, 2024, பக்கம் 2 - 5)

தமிழாக்கம்

மவ்லவி A.அப்துர்ரஹ்மான் தாஹிர்

** * * * * * *

**12- ம் பக்கத் தொடர்ச்சி....**
**(குத்பா பேருரை)**

பெண்மணி மிகவும் பதற்றமடைந்தார். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அங்கு சென்றடைந்ததுமே மிகவும் நிதானமாக பானை மற்றும் மாவுப் பாத்திரத்திற்காக துஆ செய்தார்கள். பிறகு, இப்பொழுது ரொட்டியை சமைக்க ஆரம்பியுங்கள் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு அன்னார் (ஸல்) மெது மெதுவாக உணவை விநியோகிக்கத் துவங்கி விட்டார்கள்.

ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எவன் கையில் என் உயிர் இருக்கிறதோ அ(ந்த இறை)வன் மீது ஆணையாக! அந்த உணவாலேயே எல்லாரும் வயிறு நிறைய உணவு உண்டு எழுந்து விட்டார்கள். அப்பொழுது எங்கள் பானை அதேபோன்று கொதித்துக் கொண்டிருந்தது. மாவு அதே போன்று வெந்து கொண்டிருந்தது.

அஹ்ஸாப் போர் தொடர்பாக மற்ற விஷயங்களை இனி எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

நான் துஆக்களின் பக்கம் கவனமூட்டிக் கொண்டே இருக்கிறேன்.இதன் பக்கம் அதிகம் கவனத்தை வைத்திருங்கள். அல்லாஹ் நம்முடைய ஈமானை வலுப்படுத்துவானாக! எல்லா நாடுகளிலும் வாழும் அஹ்மதிகளை வங்காள தேசத்தில், பாகிஸ்தானில் மற்ற இடங்களில், எல்லா இடங்களிலும், எல்லாத் தீங்கிலிருந்தும் எல்லா அஹ்மதிகளையும் அல்லாஹ் பாதுகாப்பானாக!

உலகையும் அது எந்த நெருப்பில் விழுந்து கொண்டிருக்கிறதோ (எந்த நெருப்புக்குள்) நுழைய மிக வேகமாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறதோ அதிலிருந்து உலகத்தையும் காப்பாற்றுவானாக! அல்லாஹ் கருணை புரிவானாக! அல்லாஹ் எல்லா ஆற்றல்களுக்கும் சொந்தக்காரன் ஆவான். இப்பொழுதும் கூட இந்த மக்கள் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தினால், அல்லாஹ் இவர்களை இன்னல்களிலிருந்து வெளிக் கொணர முடியும். அல்லாஹ் இவர்களுக்கு அறிவும், புரிதலும் வரச் செய்வானாக!

தமிழாக்கம்

மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

** * * * * * *

# ஜுமுஆ பேருரை

**அஹ்ஸாப் போருக்காக அகழ் தோண்டுதல் மற்றும் அந்தப் பணியின் போது**

**நிகழ்ந்த சில அற்புதங்கள்**

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முதல்முறை வெளிச்சம் வெளிப்பட்ட போது, ஹைரா மற்றும் கிஸ்ராவின் மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும், ஜிப்ரீல் அவர்கள் என்னிடம் தங்களது உம்மத் இதைக் கைப்பற்றும் என்று கூறினார்கள். இரண்டாவது முறை வெளிச்சத்தில் ரோம் தேசத்தின் செந்நிற மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும், ஜிப்ரீல் (அலை) அவர்கள் தங்களது உம்மத் இதைக் கைப்பற்றும் என்று கூறினார்கள். மூன்றாவது முறை வெளிச்சம் வெளிப்பட்ட போது, ஸன்ஆவின் மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும் ஜிப்ரீல் (அலை) அவர்கள், தங்களது உம்மத் இவற்றையும் வெற்றி காணும் என்று கூறினார்கள். எனவே உங்களுக்கு நற்செய்தி!

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பங்களிப்பு மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துஆக்களின் பரக்கத்தால் ஸஹாபிகளோ தமது வேதனையையும், கடின உழைப்பினால் ஏற்படும் பெரும் வேதனையை மறந்தே விடுவார்கள்

அஹ்மதிகளின் ஈமானின் உறுதிப்பாட்டிற்காகவும், உலகின் பொதுவான நிலவரங்களுங்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை

உலகையும் அது எந்த நெருப்பில் விழுந்து கொண்டிருக்கிறதோ (எந்த நெருப்புக்குள்) நுழைய மிக வேகமாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறதோ அதிலிருந்து உலகத்தையும் காப்பாற்றுவானாக! அல்லாஹ் கருணை புரிவானாக!

அல்லாஹ் எல்லா ஆற்றல்களுக்கும் சொந்தக்காரன் ஆவான். இப்பொழுதும் கூட இந்த மக்கள் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தினால், அல்லாஹ் இவர்களை இன்னல்களிலிருந்து வெளிக் கொணர முடியும். அல்லாஹ் இவர்களுக்கு அறிவும், புரிதலும் வரச் செய்வானாக!

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 செப்டம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **தபூக்** மாதம் **13 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ○ الرَّحْمٰنِ الرَّحِيمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّينِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ○
صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ○

அஹ்ஸாப் போர் பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டு வந்தது. அதாவது, கைபரைச் சேர்ந்த யூதர்களின் வாக்குறுதி மீறல் மற்றும் வன்மத்தின் காரணமாக, முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை அழிப்பதற்காக எவ்வாறு நிராகரிப்பாளர்களின் ஒரு படை உருவானது என்பதை பற்றி கூறப்பட்டது. இது குறித்த கூடுதல் விவரம் வரலாற்றிலிருந்து இவ்வாறு கிடைக்கின்றது;

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸுலைத் மற்றும் ஸுஃப்யான் பின் அவ்ஃப் அஸ்லமீ ஆகியோரைப் படைகளைக் குறித்த செய்தி அறிந்து வருவதற்காக அனுப்பினார்கள். ஆக, இவர்கள் இருவரும் சென்றார்கள். இவர்கள் பைஸா எனும் இடத்தை அடைந்ததும் - பைஸா என்பது மக்காவுக்கும், மதீனாவுக்கும் நடுவில் ஸுல்ஹுலைஃபா எனும் இடத்தைத் தாண்டி அமைந்திருக்கும் ஒரு மைதானப் பகுதியாகும். ஸுல்ஹுலைஃபா மதீனாவிலிருந்து 6,7 மைல் தொலைவில் உள்ளது. எவ்வாறாயினும், அபூ ஸுஃப்யானின் குதிரை வீரர்கள் இவர்கள் இருவர் பக்கமும் திரும்பினார்கள். (இவர்களைப்) பார்த்து விட்டார்கள். எதிரிகள் இவர்களைப் பார்த்ததும், இவர்கள் இருவரும் போரிட்டவாறு ஷஹீது ஆகிவிட்டார்கள். இவர்கள் இருவரும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார்கள். ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அகழ் தோண்டுவதாக முடிவானதும், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது குதிரையில் பயணமானார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பல முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் உடன் இருந்தார்கள். ஆக, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் படை முகாமிடுவதற்காக இடத்தைத் தேடினார்கள். அப்பொழுது அன்னார் (ஸல்) ஸலாஹ் எனும் மலை தம் முதுகுக்குப் பின்புறம் வரும் வண்ணம், மஸாஸ் முதல் ஸுபாய் மற்றும் ராதிஜ் வரை அகழ் தோண்டப்பட வேண்டும் (என்று முடிவெடுத்தார்கள்.) இதுவே எல்லாவற்றையும் விடப் பொருத்தமான இடமாகத் தென்பட்டது. மஸாஸ் மதீனாவில் ஸுலாஹ் மலைக்கு அருகில் இருந்த ஓரிடமாகும். ஸுபாய் மதீனாவுக்கு அருகில் இருந்த ஒரு மலையின் பெயராகும். ராதிஜ் மதீனாவின் கோட்டைகளில் ஒரு கோட்டையாகும். இது யூதர்களின் கோட்டையாக இருந்தது. இது ஸுபாபுக்குக் கிழக்கில் அமைந்திருந்த ஒரு சிறிய மலையாகும் என்றும் கூறப்படுகிறது.

ஆக, அன்றைய நாள் அகழ் தோண்டும் பணி துவங்கியது. முஸ்லிம்கள் பனூ குறைழா கோத்திரத்திடமிருந்து, கடப்பாரைகள், பெரிய கோடாரிகள், மண் வெட்டிகள் போன்ற அகழ் தோண்டுவதற்கான பல கருவிகளை கடனாக வாங்கினார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒவ்வோர் இடத்திலும் அகழ் தோண்டும் பணியை ஒரு கோத்திரத்திடம் ஒப்படைத்து விட்டார்கள். அன்னார் (ஸல்) ஸஹாபிகளைப் பத்துப் பத்து அணிகளாகப் பிரித்து விட்டார்கள். மேலும் ஒவ்வொரு பத்து பேருக்கும் ஏறத்தாழ 40 அடி நிலப்பரப்பை நிர்ணயித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அகழ் தோண்டும் பணியில் தாமும் பங்கெடுத்தார்கள். மேலும் தமது முதுகில் மண் சுமந்தார்கள். எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முதுகும், வயிறும் புழுதிப்படிந்து வந்தது. எந்த முஸ்லிம்கள் தங்களுக்கான பகுதியை முடித்து விடுவார்களோ அவர்கள் மற்றவர்களுக்கு உதவுவதற்காக சென்று விடுவர். எதுவரை என்றால், அகழ் முழுமையடைந்து விட்டது. ஒரு வேலை முடிந்து விட்டதும் அமர்ந்து கொண்டார்கள் என்பதில்லை. மாறாக, தம் தோழர்களுக்கு உதவி செய்வதற்காக சென்றடைந்து விடுவார்கள். அகழ் தோண்டுவதில் எந்த முஸ்லிமும் பின்தங்கியிருக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் கூடைகள் கிடைக்காத போது, விரைவாகத் தங்களது ஆடைகளைக் கொண்டு மண்ணை இடம் மாற்றுவார்கள். போர்வையிலேயே மண்ணைப் போட்டுக் கொண்டு சென்று விடுவார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் இதன் விவரத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி)

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கூறுகின்றார்கள்:

இவ்வளவு பெரிய படையின் அசைவுகளை மறைத்து வைப்பது நிராகரிப்பாளர்களுக்கு கடினமானதாக இருந்தது. பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்திருந்த உளவுபார்ப்பதற்கான ஏற்பாடும் மிகவும் சிறப்பானதாக இருந்தது. ஆக, குறைஷியர்களின் படை மக்காவிலிருந்து புறப்பட்டுதான் இருந்தது. அதற்குள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, அவர்களைப் பற்றிய செய்தி சென்று சேர்ந்து விட்டது. இதனால் அன்னார் (ஸல்) ஸஹாபிகளை ஒன்றுகூட்டி இது குறித்து ஆலோசனை செய்தார்கள். இந்த ஆலோசனையில் ஈரானின் ஒரு தூய ஸஹாபி ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள் அஜமீகளின் போர் வழிமுறையை அறிந்திருந்தார்கள்.

அதாவது அரேபியர் அல்லாதவர்களின் போர் வழிமுறையை அறிந்திருந்தார்கள். மதீனாவில் பாதுகாப்பற்ற பகுதிக்கு முன்னால் ஒரு நீளமான மற்றும் ஆழமான அகழ் தோண்டி நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற ஆலோசனையை அவர்கள் முன்வைத்தார்கள். அகழ் தோண்டும் சிந்தனை அரேபியர்களுக்கு முற்றிலும் புதியதாக இருந்தது. ஆனால், அரபு அல்லாத வட்டாரங்களில் இந்தப் போர் வழிமுறை பொதுவாக வெற்றிகரமாக வழக்கத்தில் உள்ளது என்பதை அறிந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். இந்த வழிமுறை சரியானது என்று அல்லாஹ்வும் அன்னாருக்குக் கூறினான் என்பது கடந்த குத்பாவிலும் கூறப்பட்டது.

எவ்வாறு இருப்பினும், இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: மதீனா மாநகரம் மூன்று திசைகளிலிருந்தும் ஓரளவுக்குப் பாதுகாப்பாக இருந்தது. அதாவது, வீடுகளின் தொடர்ச்சியான மதில்கள், அடர்த்தியான மரங்கள் மற்றும் இடைவிடாத பாறைகள் ஆகியவற்றின் காரணமாக இந்த திசைகள் காஃபிர்களின் படையின் திடீர்த் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருந்தன. சிரியாவின் திசை மட்டுமே எதிரிகள் அந்தப் பக்கமாக திரளாக வந்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க முடிகிற வகையில் இருந்தது. எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பாதுகாப்பற்ற பக்கத்தில் அகழ் தோண்டுமாறு கட்டளையிட்டார்கள்.

அன்னார் (ஸல்) சுயமே தமது கண்காணிப்பில் இடங்களை அடையாளமிட்டு பணியைப் பிரித்துக் கொடுக்கும் வழிமுறைகளின் அடிப்படையில் அகழைப் பத்துப் பத்துக் கைகள் அளவுக்கு, அதாவது 15,15 அடிகளில் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியையும் பத்துப் பத்து ஸஹாபிகளிடத்தில் ஒப்படைத்தார்கள். இந்தக் குழுக்களைப் பிரிப்பதில் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள் எந்தக் கூட்டத்தில் சேர வேண்டும் என்ற மகிழ்ச்சிகரமான கருத்து வேறுபாடு வெளிப்பட்டது. ஒவ்வொரு கூட்டமும் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள் அதில் சேர வேண்டும் என்று விரும்பியது. அவர்கள் முஹாஜிர் ஆகக் கருதப்பட வேண்டுமா? அல்லது அவர்கள் இஸ்லாம் வருவதற்கு முன்னரே மதீனாவுக்கு வந்திருந்தார்கள் என்பதனால் அன்ஸார் ஸஹாபிகளில் கணக்கிடப்பட வேண்டுமா? (என்ற கேள்வி எழுந்தது).

ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள் இந்தப் போர் வழிமுறையை எடுத்து வைத்தவர். அது மட்டுமின்றி, ஒரு திறமைசாலி; முதுமை அடைந்திருந்தும் வலுவான மனிதராக இருந்தார்; போன்ற காரணங்களினால் ஒவ்வொரு குழுவும் அவர்களைத் தம்முடன் இணைத்துக் கொள்ள விரும்பியது. இறுதியில், இந்தக் கருத்து வேறுபாடு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான பார்வைக்கு முன் வைக்கப்பட்டது. அன்னார் (ஸல்) இரு பிரிவினரின் வாதங்களையும் கேட்டார்கள். இரு சாராரும், ஒவ்வொருவரும் முன் வைத்த வாதங்களை அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

பின்னர் புன்சிரித்தவாறு அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஸல்மான் இருவரையும் சேர்ந்தவர் இல்லை. அவர் முஹாஜிர்களைச் சேர்ந்தவரும் இல்லை ; அன்ஸார் கூட்டத்தினரைச் சேர்ந்தவரும் இல்லை . மாறாக ஸல்மானு மின்னா அஹ்லுல் பைத்தீ. அதாவது ஸல்மான் எனது வீட்டாரில் ஒருவராகக் கணக்கிடப்பட வேண்டும்.

அந்த நேரத்திலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீட்டு நபராகக் கருதப்படும் கண்ணியம் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்களுக்குக் கிடைக்கப் பெற்றது.

ஆக, அகழ் தோண்டும் தீர்மானம் உறுதியான பிறகு, ஸஹாபா பெருமக்களின் கூட்டம் தொழிலாளிகளின் ஆடையை அணிந்து கொண்டு போர்க்களத்துக்குப் புறப்பட்டு வந்தது. அகழ் தோண்டும் பணி எளியாக பணியாக இருக்கவில்லை. பெரும் சிரமமான பணியாக இருந்தது. பின்னர் இந்தக் காலம் குளிர்காலமாக இருந்தது. அதனால், அந்த நாட்களில் ஸஹாபா பெருமக்கள் கடும் துன்பங்களை மேற்கொண்டார்கள். மற்ற தொழில்கள் முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டன. அன்றாட உணவை அன்றாடம் சம்பாதிக்கும் பணி செய்து வந்த மக்களும் இருந்தார்கள். ஸஹாபிகளில் இத்தகைய மக்கள் குறைவாக ஒன்றும் இருக்கவில்லை. அன்றாட தேவைக்கு அன்றாடம் பணி செய்து வந்தார்கள். அதன் மூலம் அவர்களுக்கு உணவுக்கான பணம் கிடைத்து வந்தது. அவர்களுக்கோ அந்த நாட்களில் பசி மற்றும் பட்டினிக்கான இன்னலையும் பொறுத்துக் கொள்ள வேண்டி வந்தது.

ஸஹாபிகளிடம் பணியாளர்களும் அடிமைகளும் கூட இருக்கவில்லை. எனவே அனைத்து ஸஹாபிகளும் சுயமே தம்முடைய கைகளால் வேலைகள் செய்ய வேண்டி வந்தது. பத்துப் பத்துப் பேர்களைக் கொண்ட குழு நிர்ணயிக்கப்பட்டிருந்ததே; அவர்கள் தங்களுடைய பணிகளைத் தங்களுக்குள் இவ்வாறு பிரித்துக் கொண்டிருந்தார்கள். அதாவது, சிலர் தோண்டுவார்கள். சிலர் தோண்டி எடுக்கப்பட்ட மண்ணையும், கற்களையும் கூடைகளில் நிரப்பி, நிரப்பி தங்களுடைய தோள்களில் சுமந்து வெளியில் கொட்டிக் கொண்டே இருப்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் தமது நேரத்தின் பெரும் பகுதியை அகழ் பக்கம் செலவழித்து வந்தார்கள். சிலவேளைகளில் தாமும் ஸஹாபிகளுடன் இணைந்து தோண்டும் பணியையும் மண்ணை சேர்த்துவாரி இடம் மாற்றும் பணியையும் செய்து வந்தார்கள்.

அகழ் தோண்டும் போது, புத்துணர்ச்சியுடன் வைத்திருப்பதற்காக கவிதைகளும் பாடப்பட்டு வந்தன. இதன் விவரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஸஹ்ல் பின் ஸஃது (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அனஸ் (ரலி) ஆகியோர் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களிடம் வருகை தந்த போது, நாங்கள் அகழ் தோண்டிக் கொண்டிருந்தோம். மேலும் எங்களுடைய தோள்களில் (வைத்து) மண்ணை இடம் மாற்றிக் கொண்டிருந்தோம்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுடைய இந்தக் கடும் உழைப்பையும், பசியையும் கண்டபோது இவ்வாறு கூறினார்கள்:

اَللّٰهُمَّ لَا عَيْشَ إِلَّا عَيْشُ الْآخِرَةْ
فَاغْفِرِ الْأَنْصَارَ وَالْمُهَاجِرَةْ

பொருள்: அல்லாஹ்வே! இன்பம் என்பதோ மறுமையின் இன்பம் மட்டுமே ஆகும். எனவே நீ அன்ஸார் மற்றும் முஹாஜிர்களை மன்னித்து விடுவாயாக! இதற்கு பதிலாக ஸஹாபா பெருமக்கள் இவ்வாறு கூறினர்:

نَحْنُ الَّذِيْنَ بَايَعُوْا مُحَمَّدَا
عَلَى الْجِهَادِ مَا بَقِيْنَا أَبَدَا

பொருள்: நாங்கள் உயிருள்ள வரை ஜிஹாது செய்வோம் என்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தவர்கள் ஆவோம்.

ஹஸ்ரத் பராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகிறது. அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அகழ் நாளன்று நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை மண் சுமக்கக் கண்டேன். எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வயிற்றின் வெண்மை மண்ணால் மறைந்து விட்டது.ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இப்னு ரவ்ஹாவின் இந்தக் கவிதைகளைக் கூறியதை நான் கேட்டேன்.

பொருள்: எங்கள் எஜமானனே! உனது அருள் இல்லாமல் இருந்திருந்தால், எங்களுக்கு நேர்வழி கிடைத்திருக்காது. நாங்கள் ஸதகா மற்றும் தான தருமங்கள் செய்வதற்கும், உன்னை வணங்குவதற்கும் தகுதி படைத்தவர்களாக ஆகியிருக்க

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

முடியாது. எனவே இறைவா! நீ! எங்களை இந்த அளவுக்குக் கொண்டு சேர்த்திருக்கும்போது, இப்பொழுது இந்த இன்னலின் போது எங்களுடைய உள்ளங்களுக்கு நிம்மதியை! வழங்குவாயாக! ஒருவேளை எதிரியுடன் மோத நேரிட்டால் எங்களுடைய பாதங்களை உறுதியாக வைத்திருப்பாயாக!

இந்த மக்கள் எங்களுக்கு எதிராக அநீதியாகவும், அநியாயமாகவும் தாக்குதல் தொடுக்கிறார்கள் என்பதையும், எங்களை எங்களது மார்க்கத்திலிருந்து விலக்குவதுதான் அவர்களது எண்ணம் என்பதையும் நீ அறிவாய்; ஆனால், எங்கள் இறைவா! உனதருளால் எங்கள் நிலை எப்படி இருக்கிறது என்றால், அவர்கள் எங்களை மார்க்கத்திலிருந்து விலக்குவதற்காக ஏதாவது சதி செய்யும் போது, நாங்கள் அவர்களது சதியைத் தொலைவிலிருந்தே முறியடித்து விடுகிறோம். அவர்களுடைய குழப்பத்தில் சிக்க மறுத்து விடுகிறோம். நாங்கள் மறுத்து விடுகின்றோம். மறுத்து விடுகின்றோம் என்று கூறும்போது, பெருமானார் (ஸல்) அவர்கள் ஓசையை உயர்த்துவார்கள். கவிதையின் இறுதியில் ஓசையை நீட்டுவார்கள் என்று ஓர் அறிவிப்பில் உள்ளது. எவ்வாறாயினும், அகழ் தோண்டுவது என்பது கடும் உழைப்பை வேண்டும் ஒரு பணியாக இருந்தது. மற்ற ஸஹாபிகளைப் போன்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அகழ் தோண்டுவதில் கூடவே இருந்தார்கள். சிலவேளை கடப்பாரையை செலுத்துவார்கள் என்றால், சிலவேளை மண் வெட்டியை வைத்து மண்ணை வாரி எடுப்பார்கள். சிலவேளை கூடையில் மண் சுமப்பார்கள்.

ஒருநாள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மிக அதிகமாக களைப்பு ஏற்பட்டதனால், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அமர்ந்து விட்டார்கள். பிறகு அன்னார் (ஸல்) தமது வலது பக்கமாக கல் மீது சாய்ந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு உறக்கம் வந்து விட்டது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தலைமாட்டில் நின்று கொண்டார்கள். மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களை எழுப்பிவிடாமல் இருக்கும் பொருட்டு, மக்களை அன்னார் பக்கம் கடந்து செல்லவிடாமல் தடுத்து வந்தார்கள்.

சிறிது நேரம் கழித்து ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கண்விழித்ததும், அன்னார் (ஸல்) உடனடியாக எழுந்து நின்றார்கள். நீங்கள் ஏன் என்னை எழுப்பவில்லை? அதாவது, நான் உறங்கிக் கொண்டிருந்தேன். ஏன் என்னை தூக்கத்திலிருந்து எழுப்பவில்லை? என்று கேட்டார்கள். பிறகு அன்னார் (ஸல்) பெரிய கோடாரியை எடுத்து நிலத்தில் அடிக்கத் துவங்கினார்கள். அதாவது, வேலையைத் துவங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பங்களிப்பு மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துஆக்களின் பரக்கத்தால் ஸஹாபிகளோ தமது வேதனையையும், கடின உழைப்பினால் ஏற்படும் பெரும் வேதனையை மறந்தே விடுவார்கள். ஒருபக்கம் தூய கவிதைகள் பாடப்பட்டு வந்தன என்றால், மறுபக்கம் லேசான நகைச்சுவையும் இருந்து வந்தது. ஆக ஒருமுறை சிறுவயது இளைஞராக இருந்த ஹஸ்ரத் ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள் அகழ் தோண்டிக் கொண்டே இருக்கும் போது, அகழுக்கு உள்ளேயே உறங்கி விட்டார்கள். எனவே அவர்களின் தோழர் ஒருவர் அவருடைய மண் தோண்டும் கருவிகளை விளையாட்டாக எடுத்து வைத்துக் கொண்டார்கள். அவர்கள் கண்விழித்தபோது, தம்முடைய பொருட்கள் இல்லாததைப் பார்த்து பதற்றமடைந்து விட்டார்கள். ஆனால், மற்ற நண்பர்களோ இவர்கள் கவலைப் படுவதைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்ததும், அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களிடம், பாலகனே! உனது பொருட்களைப் பற்றித் தெரியாத அளவுக்கு நீ உறங்கி விட்டாயே என்று கூறினார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களிடம் சென்றார்கள். மேலும், புன்சிரித்தவாறு, யா அபாரு காதின்! (உறக்கத்தில் மூழ்கி போகும் நபரே) என்று கூறினார்கள். அத்துடன் இதுபோன்ற நகைச்சுவை செய்வதையும் நுட்பமான முறையில் சீர்திருத்தினார்கள். ஸைதுடைய பொருட்களைப் பற்றி யாருக்காவது தெரியுமா? என்று கேட்டார்கள். அப்பொழுது ஒரு நபர், ஹுஸுர் (ஸல்) அவர்களே! அவருடைய பொருட்கள் என்னிடம் உள்ளன ; நான் தான் எடுத்(து வைத்)திருந்தேன். என்று பணிவுடன் கூறினார். அதற்கு, ஒரு முஸ்லிமை அவருடைய ஆயுதங்கள் மற்றும் பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டு இப்படி தொந்தரவு செய்யக் கூடாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஸஹாபிகளின் தொடர்ச்சியான இந்த 24 மணிநேர முயற்சி மற்றும் ஹுஸுர் (ஸல்) அவர்களின் துஆக்களின் பரக்கத்தால் இந்த அகழ் (தோண்டும் பணி) முழுமையடைந்து விட்டது. முஸ்லிம்கள் அகழ் தோண்டி அதை உறுதி வாய்ந்ததாக ஆக்கி விட்டார்கள். அகழ் தோண்டும் பணி எவ்வளவு காலகட்டத்தில் நிறைவடைந்தது என்பது தொடர்பாக இவ்வாறு அறிவிப்புகள் உள்ளன ; 6 நாட்கள், 10 நாட்கள், 15 நாட்கள், 20 நாட்கள் மற்றும் ஒரு மாதம். இந்தக் கால அளவுகள் எடுத்துக் கூறப்படுகின்றன. 15 நாட்கள் மற்றும் ஒரு மாதம் குறித்து அதிக நபர்கள் கருத்தொருமிக்கின்றார்கள்.

இந்த அகழின் நீளம் ஏறத்தாழ 6 ஆயிரம் அடி அல்லது ஒரு மூன்றரை மைல் தொலைவு இருந்தது. அகலம் என்பது ஒன்பது கைகள் அளவும், ஆழம் 7 கைகள் அளவும் எடுத்துக் கூறப்படுகிறது. ஒரு கை என்பது ஒன்றை அடி என்று கூறப்படுகின்றது. இவ்வாறு அகலம் 13, 14 அடியும், ஆழம் 10,11 அடியும் ஆகிறது.

இந்த மிக நீளமான, அகலமான அகழ் பல நூற்றாண்டுகள் வரை இருந்தது. எதுவரை என்றால், பத்ஹான் பகுதியிலிருந்து தொடர்ச்சியான நீரோட்டம் மற்றும் பிளவின் காரணமாக அது சிறிது சிறிதாக இல்லாமல் ஆகிக் கொண்டே இருந்தது. பத்ஹான் என்பதும் மதீனாவின் பிரசித்தி பெற்ற மூன்று பள்ளத்தாக்கில் ஒன்றாகும். மற்ற இரண்டு பள்ளத்தாக்குகள் அகீக் மற்றும் கினாஹ் பள்ளத்தாக்குகள் ஆகும். அகழைக் கடந்து செல்வதற்கான வழி உருவாவதற்காக மக்கள் அதை கொஞ்சம் மூடி விட்டிருந்தார்கள். மீதமிருந்த பள்ளத்தாக்கு பத்ஹான் எனும் நீரோடையால் நிறைந்து விட்டது. ப(ஹ)ல் என்பது நதியிலிருந்து மழைநீருடன் கலந்து வரும் சேறு ஆகும். அது சேர்ந்து கொண்டே போனது. அதன் மூலம் (அகழ்) மூடிக் கொண்டது.

ஹிஜ்ரீ ஆறாம் நூற்றாண்டில் மதீனாவின் வரலாற்றை எழுதும் புகழ் பெற்ற வரலாற்றாசிரியர் ஹாஃபிழ் இப்னு நஜ்ஜார் எழுதுகிறார்:

அகழைப் பொறுத்த மட்டில் அது இன்றும் நமது காலகட்டத்தில் இருக்கின்றது. ஆயினும், அது கால்வாயாக மாறி விட்டது. அதன் சுவர்கள் பல இடங்களில் இடிந்து விட்டன. மேலும், பெருமளவிலான பேரீத்த மரங்கள் அதற்குள் வளர்ந்து விட்டன.

ஹிஜ்ரீ ஒன்பதாம் நூற்றாண்டின் ஓர் எழுத்தாளர் எழுதுகின்றார்: இன்று அந்த அகழிலில் ஒன்றுமே எஞ்சவில்லை. 600 ஆண்டுகள் வரையோ இது நிலைபெற்றிருந்தது. ஒன்பதாம் நூற்றாண்டில் அவர் கூறுகிறார்:

பத்ஹான் பள்ளத்தாக்கின் ஒரு பகுதியான அந்த நதியின் மூலமாக அது அந்த இடத்தில் ஓடுவதை வைத்து, அது அமைக்கப்பட்ட இடம் தெரிய வருகிறது. அதைத் தவிர வேறு எந்த அடையாளமும் இல்லை.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: மதீனாவில் இந்த நாட்கள் அச்சம், திகில் மற்றும் கவலையூட்டுபவையாக இருந்தன. நயவஞ்சகர்கள் சாக்குபோக்குகளை உருவாக்கி தத்தமது தங்குமிடங்கள் மற்றும் வீடுகளின் பக்கம் செல்லத் துவங்கி விட்டார்கள். ஆனால், ஸஹாபிகளின் பொதுவான உத்வேகத்தையும், பேரார்வத்தையும் பார்க்க வேண்டுமே! குழந்தைகளும், பெண்களும் கூட அவர்களுடன் தோளோடு தோள் நின்று அவர்களுடைய துணிவை அதிகரிப்பதிலும் அவர்களுக்கு உதவுவதிலும் முன்னணியில் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய துணைவிமார்களும் இந்த ஆபத்தான தருணத்தில் மனஉறுதியுடனும், துணிச்சலுடனும் வீரத்துடன் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் துணை நின்றவர்களாக தென்படுவார்கள்.

அகழ் மதீனாவுக்கு வெளியில் தோண்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெரும்பாலும் இங்கேயே இருந்து வந்தார்கள். மதீனாவின் பெண்களையும், குழந்தைகளையும் மதீனாவில் சில பாதுகாப்பான கோட்டைகளுக்கு மாற்றி விட்டிருந்தார்கள். எனவே சிலவேளை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல்வார்கள். சிலநாட்கள் இருப்பார்கள். பிறகு ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் சில நாட்கள் இருப்பார்கள். மற்ற எல்லா தூய துணைவிமார்களும் பனூ ஹாரிஸாவின் வலுவான கோட்டைகளில் இருந்தார்கள். தூய துணைவிமார்கள் பனூ ஸுரைக் உடைய நஸ்ர் எனும் கோட்டையில் இருந்ததாக சிலர் கூறினார்கள். தூய துணைவிமார்களில் சிலர் ஃபாராவில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவை பல்வேறு அறிவிப்புகள் ஆகும். ஃபாரா என்பது மதீனாவில் ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களின் கோட்டையாக இருந்தது.

அகழ் தோண்டும் நேரத்தில் சில அற்புதங்களும் நடந்தன. அவற்றில் ஒன்றாக, தோண்டும் போது பாறை உடையாமல் இருந்த நிகழ்வும் எடுத்துக் கூறப்படுகிறது. அறிவிப்பில் இவ்வாறு

வருகிறது. அகழ் தோண்டும் போது கடினமாதும் மற்றும் பாறை நிறைந்ததுமான ஓரிடம் வந்து விட்டது. கடினமாக முயற்சி செய்தும் ஸஹாபிகளால் அந்த இடத்தை தோண்ட முடியாமல் போனது. இறுதியில் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து முறையிட்டார்கள். அன்னார் (ஸல்) கடப்பாரையை வாங்கி அந்த இடத்தில் அடித்ததும் அந்தப் பாறை நிறைந்த பகுதி மணலைப் போன்று உதிர்ந்து போனது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறிது தண்ணீர் கொண்டு வரச் செய்தார்கள். அதில் தமது அருளுக்குரிய உமிழ் நீரைக் கலந்தார்கள். பிறகு அன்னார் (ஸல்) அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள்.அதற்குப் பிறகு இந்தத் தண்ணீரை அந்தப் பாறை நிறைந்த பகுதியில் தெளித்து விட்டார்கள். அந்த நேரத்தில் அங்கிருந்த ஸஹாபிகளில் சிலர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை உண்மையை வழங்கி வெளிப்படுத்திய (அந்த இறை)வன் மீது ஆணையாக! இந்தத் தண்ணீர் பட்டவுடனேயே அந்த நிலம் மென்மையாகி மணலைப் போன்று ஆகிவிட்டது.

அரசர்கள் பற்றிய நற்செய்திகள் வழங்கப்பட்ட அந்த நிகழ்வு வேறு நிகழ்வாகும். அந்த மற்றொரு நிகழ்வு இவ்வாறு கூறப்பட்டுள்ளது: முதல் நிகழ்வோ தண்ணீர் ஊற்றுவது பற்றி இருந்தது. இந்த நிகழ்வில் அன்னாருக்கு வருங்கால அரசாட்சிகள் பற்றி நற்செய்திகள் வழங்கப்பட்டன. அது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

மற்றொரு சந்தர்ப்பத்தில் (நடந்ததாகக்) கூறப்பட்டுள்ளதாவது, ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்களால் ஒரு பாறையை உடைக்க முடியாமல் இருந்தது. எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்களிடமிருந்து கடப்பாரையை வாங்கிக் கொண்டார்கள். அன்னார் (ஸல்) ஓர் அடி அடித்ததும் ஒரு மின்னலைப் போன்ற பொலிவு தென்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். அருகிலிருந்த ஸஹாபிகளும் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். மேலும் அதன் ஒரு பகுதி உடைந்து விட்டது.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இரண்டாவது முறை அடித்தார்கள். மேலும் அதிலிருந்து ஒளி தென்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். மேலும் பாறையின் மேலும் ஒரு சிறிய பகுதி உடைந்து விட்டது. பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூன்றாவது முறை அடித்தார்கள். மேலும் பாறையின் மீதமிருந்த பகுதியும் உடைந்து விட்டது. பிறகு அதிலிருந்து இன்னும் ஒரு வெளிச்சம் வெளிப்பட்டதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். ஸஹாபிகள் ஒவ்வொரு முறையும் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள்.

அருகிலேயே நின்று கொண்டிருந்த ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, தாங்கள் கடப்பாரையை வைத்து உடைக்கும்போது, பாறையிலிருந்து ஓர் ஒளி போன்று வெளிப்பட்டு வந்ததே: தாங்கள் அல்லாஹு அக்பர் என்றும் கூறினீர்களே! என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஸல்மானே! நீரும் ஒளியைப் பார்த்தீரா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நானும் பார்த்தேன் என்று அன்னார் (ரலி) பணிவுடன் கூறினார்கள்.

இதற்கு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முதல்முறை வெளிச்சம் வெளிப்பட்ட போது, ஹைரா மற்றும் கிஸ்ராவின் மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும், ஜிப்ரீல் அவர்கள் என்னிடம் தங்களது உம்மத் இதைக் கைப்பற்றும் என்று கூறினார்கள். இரண்டாவது முறை வெளிச்சத்தில் ரோம் தேசத்தின் செந்நிற மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும், ஜிப்ரீல் (அலை) அவர்கள் தங்களது உம்மத் இதைக் கைப்பற்றும் என்று கூறினார்கள். மூன்றாவது முறை வெளிச்சம் வெளிப்பட்ட போது, ஸன்ஆவின் மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும் ஜிப்ரீல் (அலை) அவர்கள், தங்களது உம்மத் இவற்றையும் வெற்றி காணும் என்று கூறினார்கள். எனவே உங்களுக்கு நற்செய்தி! அனைவரும் அல்ஹம்துலில்லாஹ். (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகும்); இது உண்மையான வாக்குறுதியாகும். அல்லாஹ் நெருக்கடியான நிலைக்குப் பிறகு நமக்கு உதவிக்கான வாக்குறுதி அளித்துள்ளான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பாரசீகத்தின் மாளிகைகளின் அடையாளங்களை ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்களிடம் எடுத்துக் கூறியபோது, ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் உண்மையைக் கூறியுள்ளீர்கள் ; இது அதன் அடையாளம் ஆகும் என்று கூறினார்கள். இவை அடையாளங்கள் ஆகும் என்று எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்களோ அவற்றில் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) கூறியதை உண்மைப்படுத்தினார்கள். தாங்கள் (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்று நான் சாட்சி பகர்கிறேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸல்மானே! அல்லாஹ் இந்த வெற்றிகளை எனக்குப் பிறகு வழங்குவான். சிரியா வெற்றி கொள்ளப்படும். ஹர்கல் (பேரரசன்) தனது ஆளுமைப் பகுதியின் கடைசி (எல்லை) வரை ஓடிவிடுவான். நீங்கள் சிரியாவை வெற்றி கொள்வீர்கள். எவரும் உங்களோடு சண்டையிடவோ, உங்களை எதிர்க்கவோ மாட்டார். மேலும், இந்தக் கிழக்கு வெற்றி கொள்ளப்படும். கிஸ்ரா (பேரரசன்) கொல்லப்படுவான். அவனுக்குப் பிறகு எந்த கிஸ்ராவும் இருக்க மாட்டான்.

நயவஞ்சகர்கள் இதைப் பெரிதும் பரிகாசம் செய்து வந்தார்கள். இன்னல்கள், இயலாமை, அச்சம் மற்றும் திகில் நிறைந்த இந்த நிலையில் அந்த மகத்துவமிக்க : ஆனால் வெளிப்படையில் பார்க்கையில் சாத்தியமற்றதாக் தென்படும் நற்செய்திகள் மூலம் நம்பிக்கை கொண்டவர்களின் ஈமானோ மேலும் அதிகரித்து விட்டது.


அவர் வரலாற்றில் இவ்வாறு எழுதியுள்ளார்: இன்னல்கள், இயலாமை, அச்சம் மற்றும் திகில் நிறைந்த அந்த மகத்துவ மிக்க, ஆனால் வெளிப்படையில் பார்க்கையில் சாத்தியமற்றதாகத் தென்படும் நற்செய்திகள் மூலம் நம்பிக்கை கொண்டவர்களின் ஈமானோ மேலும் அதிகரித்து விட்டது. அவர்களது முகமலர்ச்சி மேலும் அதிகரிப்பதற்கு அது காரணமாக அமைந்தது. ஆனால், நயவஞ்சகர்கள் இதில் பரிகாசம் செய்யத் துவங்கி விட்டார்கள். நயவஞ்சகர்கள் கூறினார்கள்: முஹம்மத் (ஸல்) அவர்கள் தாம் யஸ்ரபில் இருந்து (கொண்டு) ஹைராவின் மாளிகைகள் மற்றும் கிஸ்ராவின் நகரங்களைப் பார்ப்பதாகவும், நீங்கள் அவற்றை வெற்றி காண்பீர்கள் என்றும் தெரிவிக்கின்றார்கள். ஆனால், நீங்களோ இங்கு உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அகழ்களை தோண்டுகின்றீர்கள். நீங்கள் இங்கிருந்து வெளியேறி சிறிது தூரம் இயற்கை தேவைக்காக செல்லும் அளவுக்குக் கூட உங்களிடம் ஆற்றல் இல்லை.

இந்த சந்தர்ப்பத்தில் நயவஞ்சகர்களின் இந்தத் தன்மையைப் பற்றி அல்லாஹ் இந்த வசனத்தில் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளான்:

மேலும் அல்லாஹ்வும், அவன் தூதரும் ஏமாற்றத்தைத் தவிர வேறு எதையும் எங்களிடம் உறுதியளிக்கவில்லை என்று நயவஞ்சகர்களும், உள்ளங்களில் நோயுடையோரும் கூறிய நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்.) (33:13)

ஆனால் பார்ப்பவர்கள் பிறகு (நடந்ததைப்) பார்த்தார்கள். சில ஆண்டுகளுக்குள்ளேயே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகியோரின் கிலாஃபத் காலகட்டத்தில் இந்த நகரங்கள் மற்றும் மாளிகைகள் அனைத்தும் வெற்றி காணப்பட்டன. இதே ஆதரவற்ற, இயலாமையிலிருந்த, பட்டினி கிடந்த நம்பிக்கை கொண்டவர்கள் இந்த மாளிகைகளின் உரிமையாளர்களாக ஆனார்கள். ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இந்த எல்லா வெற்றிகளையும் நான் கண்டேன்.

பாறையை உடைத்தது மற்றும் அற்புதங்கள் வெளிப்பட்டது ஆகிய இந்த நிகழ்வுகளை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் தமது பாணியில் எடுத்துரைத்துள்ளார்கள். அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: நெருக்கடியான மற்றும் சிரமமிக்க நிலையில் அகழ் தோண்ட தோண்ட ஓரிடத்தில் இருந்து ஒரு பாறை வெளிப்பட்டது. அது எவ்வகையிலும் உடைந்தபாடில்லை. ஸஹாபிகளின் நிலை எப்படி இருந்தது? என்றால், அவர்கள் மூன்று நாட்கள் தொடர்ந்து பட்டினி கிடந்ததால் மிகவும் சோர்வடைந்து கொண்டிருந்தார்கள். கடைசியில் தொடர்ந்து போய் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும் ஒரு பாறை இருக்கிறது. அது உடைந்தபாடில்லை என்று பணிவுடன் கூறினார்கள்.

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

அப்பொழுது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிலையும் எப்படி இருந்தது? என்றால், அன்னார் (ஸல்) பசியின் காரணமாக வயிற்றில் கல்லைக் கட்டி வைத்திருந்தார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் உடனடியாக அங்கு சென்றார்கள். ஒரு கடப்பாரையை எடுத்து, அல்லாஹ்வின் பெயரைக் கூறி அந்தப் பாறை மீது அடித்தார்கள். இரும்பு பட்டதனால் பாறையிலிருந்து ஒரு பொறி தென்பட்டது. இதைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உரத்த குரலில், அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். மேலும் எனக்கு சிரியா அரசின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன : இறைவன் மீதாணையாக! இப்பொழுது சிரியாவின் செந்நிற மாளிகைகள் என் கண்முன் இருக்கின்றன என்று கூறினார்கள். இவ்வாறு அடித்ததனால், அந்தப் பாறை ஓரளவுக்குப் பிளவுபட்டது.

இரண்டாவது முறை அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் பெயரைக் கூறி கடப்பாரையை செலுத்தினார்கள். மீண்டும் ஒரு பொறி தென்பட்டது. இதனால் அன்னார் (ஸல்) மீண்டும் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். மேலும், இம்முறை எனக்கு பாரசீகத்தின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. மதாயின் வெள்ளை மாளிகைகள் எனக்குத் தென்படுகின்றன என்று கூறினார்கள். இம்முறை பாறை சற்று அதிகமாகவே உடைந்தது.

மூன்றாவது முறை மீண்டும் அன்னார் (ஸல்) கடப்பாரையை செலுத்தினார்கள். அதனால் மீண்டும் ஒரு பொறி தென்பட்டது. அன்னார் (ஸல்) மீண்டும் அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். மேலும் இம்முறை எனக்கு ஏமனின் திறவுகோல்கள் வழங்கப்பட்டுள்ளன. இறைவன் மீது ஆணையாக! இப்பொழுது எனக்கு ஸன்ஆவின் வாயில்கள் காட்டப்படுகின்றன என்று கூறினார்கள். அப்பொழுது அந்தப் பாறை முற்றிலும் தகர்ந்து தனது இடத்திலிருந்து விழுந்து விட்டது.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உரத்த குரலில் தக்பீர் கூறினார்கள். பிறகு ஸஹாபா பெருமக்கள் கேட்டதன் அடிப்படையில், அன்னார் (ஸல்) இந்த ஆன்மிகக் காட்சிகளை எடுத்துரைத்தார்கள். மேலும் முஸ்லிம்கள் இந்தத் தற்காலிகத் தடையை அகற்றி விட்டு, மீண்டும் தமது பணியில் மூழ்கி விட்டனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ட இவை ஆன்மிகக் காட்சிகள் ஆகும். ஆக, அந்த இக்கட்டான தருணத்தில், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முஸ்லிம்களின் எதிர்கால வெற்றிகள் மற்றும் வளங்களின் காட்சிகளைக் காட்டி, ஸஹாபிகளிடம் தன்னம்பிக்கையையும், உற்சாகத்தின் ரூஹையும் ஏற்படுத்தினான். ஆனால், வெளிப்படையான நிலையில், இந்த நேரம் எவ்வளவு நெருக்கடியான, சிரமமான நேரமாக இருந்தது என்றால், இந்த வாக்குறுதிகளைக் கேட்டு, மதீனாவின் நயவஞ்சகர்கள் முஸ்லிம்களை இவ்வாறு ஏளனம் செய்தார்கள். வீட்டை விட்டு வெளியே கால் வைக்க ஆற்றல் இல்லையாம்; சீசர் மற்றும் கிஸ்ராவின் அரசாட்சிகளைப் பற்றி கனவு காண்கிறார்கள்.

ஆனால், இந்த அருட்கொடைகள் அனைத்தும் முஸ்லிம்களுக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்ததை இறைவன் அறிந்திருந்தான். எனவே, இந்த வாக்குறுதிகள் தத்தமது நேரத்தில், அதாவது சில ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும், அதிகப்படியானவை அன்னாருடைய கலீஃபாக்களின் காலங்களிலும் நிறைவேறி முஸ்லிம்களின் ஈமான் அதிகரிப்பதற்கும், மனநிறைவுக்கும் காரணமாயின.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

அகழ் தோண்டப்படும்போது, நிலத்திலிருந்து எத்தகைய ஒரு பாறை வெளிப்பட்டது என்றால், அது மக்களால் எப்படியும் உடைந்தபாடில்லை. ஸஹாபா பெருமக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இதைப் பற்றி தெரிவித்ததும் அன்னார் (ஸல்) தாமே அங்கு சென்றார்கள். தமது கையில் கடப்பாரையைப் பிடித்து, அந்தப் பாறையில் ஓங்கி அடித்தார்கள். கடப்பாரைப் பட்டதும், அந்தப் பாறையிலிருந்து வெளிச்சம் வந்தது. அன்னார் (ஸல்) அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள்.

பிறகு மீண்டும் அன்னார் (ஸல்) கடப்பாரையால் அடித்ததும், மீண்டும் வெளிச்சம் வந்தது. மீண்டும், அன்னார் (ஸல்) அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். பிறகு அன்னார் (ஸல்) மூன்றாவது தடவை கடப்பாரையால் அடித்தார்கள். பிறகு மீண்டும் பாறையிலிருந்து வெளிச்சம் வந்தது. அத்துடன் பாறை உடைந்து விட்டது. இந்த சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) மீண்டும், அல்லாஹு அக்பர் என்று கூறினார்கள். ஸஹாபிகள் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஏன் மூன்று முறை அல்லாஹு அக்பர் என்று கூறினீர்கள்? எனக் கேட்டார்கள்.

அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: பாறையின் மீது கடப்பாரை பட்டதனால் மூன்று முறை வெளிச்சம் வெளிப்பட்டதே, ஆக, மூன்று முறையும் இறைவன் எனக்கு இஸ்லாத்தின் வருங்கால முன்னேற்றங்களுக்கான காட்சியைக் காட்டினான். முதன்முறை வந்த ஒளியில், சீசரின் ஆளுமைப் பகுதியான சிரியாவின் மாளிகைகள் காட்டப்பட்டன. எனக்கு அதன் திறவுகோல்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது முறை வெளிப்பட்ட ஒளியில் மதாயினின் வெள்ளை மாளிகைகள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும் எனக்கு பாரசீக அரசின் திறவுகோல்கள் வழங்கப்பட்டன.மூன்றாவது முறை வந்த ஒளியில் ஸன்ஆ வின் வாயில்கள் எனக்குக் காட்டப்பட்டன. மேலும் எனக்கு ஏமனின் திறவுகோல்கள் வழங்கப்பட்டன. எனவே நீங்கள் இறைவனின் வாக்குறுதிகள் மீது உறுதியான நம்பிக்கை வையுங்கள். எதிரியால் உங்களை அசைக்கக் கூட முடியாது.

நிகழ்ந்து வந்த இந்த அற்புதங்களில் உணவு தொடர்பான ஓர் அற்புதமும் இருக்கிறது. உணவு தொடர்பான இன்னும் பல அற்புதங்கள் இருக்கும். ஆனால், ஒரு நிகழ்வு இவ்வாறு கூறப்படுகிறது:

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் உணவு சமைக்கச் செய்தார்கள். அதில் பரக்கத் ஏற்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு: இந்த நாட்களில் ஒரு நாளில் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்டார்கள். அன்னார் (ஸல்) பசியால் தமது வயிற்றில் கல்லைக் கட்டியிருந்தார்கள். ஸஹாபா பெருமக்கள் மூன்று நாட்களாக அங்கு இருக்கிறார்கள். எந்த உணவுப் பொருளையும் அவர்கள் சுவைக்கக் கூட இல்லை. மூன்று நாட்கள் ஆகிவிட்டன. உண்ண எதுவும் கிடைக்கவில்லை.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வீட்டுக்குச் செல்ல அனுமதி கோரினேன். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதி வழங்கி விட்டார்கள். நான் வீட்டுக்குச் சென்று என் மனைவியிடம், நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் கடுமையான பசியின் அறிகுறிகளைக் கண்டேன். அதைக் கண்டு என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வீட்டில் ஏதாவது இருக்கிறதா? எனக் கேட்டேன். அதற்கு அவர் வீட்டில் ஒரு சாஃ அளவு அதாவது இரண்டரை கிலோவுக்கும் சற்று குறைவான அளவு கோதுமையும், ஓர் ஆட்டுக் குட்டியும் உள்ளது என்று கூறினார்.

ஆக, ஒரு சாஃ அளவு கோதுமை இருந்த அந்தப் பாத்திரத்தை மனைவி வெளியே எடுத்தார். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஆட்டுக் குட்டியை அறுத்தேன். துணைவியார் கோதுமையை அரைத்தார். நான் இறைச்சியை அடுப்பில் ஏற்றி விட்டேன். என் துணைவியார் கூறினார்: உணவு கொஞ்சமாக இருக்கிறது. எனவே அமைதியாக ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் சென்று பணிவுடன் கூறுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்களுக்கு முன்னால் நான் அவமானப்படும் நிலை ஏதும் வந்து விடப்போகிறது. அதாவது மக்கள் அதிகமாக வந்து உணவு குறைவாக இருந்து விடப் போகிறது.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் ஆஜரானேன். அமைதியாக அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களிடம் சிறிதளவு உணவு இருக்கிறது. ஹுஸூர் (ஸல்) அவர்களும், ஹுஸூர் (ஸல்) அவர்களுடன் ஒன்று அல்லது இரண்டு நபர்களும் வருகை தாருங்கள் என்று பணிவுடன் கூறினேன். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்முடைய விரல்களை என்னுடைய விரல்களில் வைத்து எவ்வளவு இருக்கிறது? எனக் கேட்டார்கள். நான் இவ்வளவு இருக்கிறது என்று கூறினேன்.

ஆக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அதிகம்தான்! நல்லது; நீர் வீட்டுக்குச் செல்வீராக! மேலும், உம் மனைவியிடம், நான் வரும் வரை அடுப்புப்

Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 THU 10 - 17 OCTOBER 2024 Issue No.41 & 42

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

பானையைக் கீழே இறக்க வேண்டாம் என்றும், ரொட்டி சமைக்க ஆரம்பிக்க வேண்டாம் என்றும் கூறுவீராக என்று கூறினார்கள். அகழ் தோண்டுபவர்களே! ஜாபிர் உங்களுக்காக உணவு தயார் செய்து வைத்துள்ளார். வாருங்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குரல் கொடுத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்களுக்கு முன்னால் செல்லத் துவங்கினார்கள். எனக்கு எவ்வளவு வெட்கம் ஏற்பட்டது என்றால், அதை அல்லாஹ் மட்டுமே அறிய முடியும். நான் மனதில் இவ்வாறு கூறினேன்: மிக அதிகமான மக்கள் விட்டார்களே!அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒரு சாஃ அளவு கோதுமையும், ஆட்டுக் குட்டியும் (மட்டும்) இருக்கையில் இவ்வளவு அதிகம் பேர் வருவது இழிவாகும்.

நான் வீட்டில் என் மனைவியிடம் சென்றேன். அப்பொழுது நான் அவரிடம் நடந்த அனைத்தையும் எடுத்துரைத்து, கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் தம்முடன் முஹாஜிர்களையும், அன்ஸார் ஸஹாபிகளையும் அழைத்து வருகிறார்கள் என்று கூறினேன். அதற்கு மனைவி கூறினார்: அல்லாஹ்வே!; அமைதியாக பணிவுடன் தெரியப்படுத்துங்கள் என்று நான் உங்களிடம் கூறவும் செய்தேனே! கணவர் மனைவியிடம், நான் முற்றிலும் நீ கூறியது போன்றுதான் கூறினேன் என்றார். மனைவி அவரிடம், மற்ற எல்லாரையும் நீங்கள் அழைத்தீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்தான் அழைத்தார்கள் என்று கூறினார்கள். ஈமான் மற்றும் களங்கமற்றத் தன்மையின் மொத்த உருவமான அந்த மனைவி இதைக் கேட்டதும், பிறகு கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. அல்லாஹ்வும் அவன் தூதரும் நன்கறிவார்கள். இப்பொழுது கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று கூறினார்.

இது அந்தப் பெண்மணியின் ஈமான் ஆகும். அவர் அந்த நேரத்தில் ஈமான் மற்றும் களங்கமற்றத் தன்மையில் தம் கணவரையும் மிஞ்சி விட்டார். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டிற்குள் வருகை தந்தார்கள். மேலும், நீங்கள் பத்துப் பத்து பேராக உள்ளே வாருங்கள் என்று கூறினார்கள். அதாவது வந்திருந்தவர்களைப் பத்துப் பத்து குழுக்களாகப் பிரித்தார்கள். ஜாபிர் (ரலி) அவர்களின் துணைவியார் மாவை வெளியே எடுத்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதில் உமிழ் நீரைக் கலந்தார்கள். பரக்கத் ஏற்படுவதற்கான துஆ செய்தார்கள். பிறகு எங்களது பானையில் உமிழ் நீரைக் கலந்து, பரக்கத்துக்கான துஆ செய்தார்கள். பிறகு எங்களிடம், ரொட்டி சுடுங்கள்; குழம்பு ஊற்றுங்கள். பிறகு பானையை மூடி வைத்து விடுங்கள். பிறகு ரொட்டியை அடுப்பில் இருந்து வெளியே எடுங்கள்;மேலும் ரொட்டிகளை மூடி வைத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஆக நாங்கள் அப்படியே செய்தோம். நாங்கள் குழம்பை எடுப்போம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பானையை மூடி விடுவார்கள். பிறகு அன்னார் (ஸல்) அதைத் திறக்கும் போது, அதில் சற்றும் குறையவில்லை என்பதை நாங்கள் கண்டோம். மேலும் அடுப்பிலிருந்து ரொட்டியை வெளியே எடுப்பார்கள். பிறகு அதை மூடி விடுவார்கள். பிறகு அதை மூடிவிடுவார்கள். அதிலிருந்து எதுவும் குறைந்திருக்காது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரொட்டிகளைத் துண்டுகளாக்குவார்கள். அதில் இறைச்சியைப் போடுவார்கள். மேலும், தம் ஸஹாபிகளுக்கு அருகில் கொண்டு சென்று, உண்ணுங்கள் என்று கூறுவார்கள். ஒரு கூட்டம் வயிறார உண்டதும், அவர்கள் சென்று விடுவார்கள். பிறகு மற்றவர்களை அழைப்பார்கள். எதுவரை என்றால், ஆயிரம் பேர் அந்த உணவை உண்டார்கள். எல்லாரும் சென்று விட்டார்கள். எங்களது பானை முன்னரைப் போன்று கொதித்துக் கொண்டிருந்தது. எங்களது மாவு முன்னரைப் போன்றே கிடந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இதை நீங்கள் உண்ணுங்கள் ; மக்களையும் அனுப்புங்கள். ஏனெனில், மக்கள் மிக அதிகம் பசியுடன் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். இந்த நிகழ்வை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களும் எழுதியுள்ளார்கள். அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்.

ஒரு களங்கமற்ற ஸஹாபி ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் முகத்தில் பசியின் காரணமாக பலவீனம் மற்றும் வலுக்குறைவின் அறிகுறிகளைப் பார்த்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் தம் வீட்டுக்குச் செல்ல அனுமதி கோரினார். அவர் வீட்டுக்கு சென்று தம் மனைவியிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பசியின் கடுமை காரணமாக மிகவும் வேதனை இருப்பதாகத் தெரிகிறது. உன்னிடம் உண்பதற்கு எதுவும் இருக்கிறதா? என்று கேட்டார்கள். அதற்கு, அவர் ஆம் ; சிறிது கோதுமை மாவு இருக்கிறது. ஓர் ஆடு இருக்கிறது என்றார்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதனால் நான் ஆட்டை அறுத்தேன். மாவைப் பிசைந்தேன். பிறகு என் மனைவியிடம், நீ உணவை தயார் செய். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று, வருகை தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறினேன். பாருங்கள்! என்னை இழிவுபடுத்தி விடாதீர்கள். உணவு குறைவாக இருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் அதிகம் பேர் வந்து விட வேண்டாம் என்று என் மனைவி கூறினார்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் சென்றேன். நான் மெதுவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் கொஞ்சம் இறைச்சியும், கோதுமை மாவும் இருக்கிறது. அவற்றை சமைக்குமாறு நான் என் மனைவியிடம் கூறி வந்துள்ளேன். தாங்கள் தங்களுடைய சில தோழர்களுடன் வருகை தாருங்கள் ; உணவு அருந்துங்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உணவு எவ்வளவு இருக்கிறது? என்று கேட்டார்கள். நான் இதோ இவ்வளவு இருக்கிறது என்று கூறினேன். அதற்கு, அன்னார் (ஸல்) அதிகம் என்று கூறினார்கள். பிறகு அன்னார் (ஸல்) தம் அக்கம் பக்கம் பார்த்து உரத்த குரலில், அன்ஸாரிகள் மற்றும் முஹாஜிர் கூட்டத்தினரே! புறப்படுங்கள்; ஜாபிர் நம்மை (விருந்திற்கு) அழைத்துள்ளார்; சென்று உணவு உட்கொள்ளுங்கள் என்று கூறினார்கள். இந்தக் குரலைக் கேட்டதும், பட்டினியாக இருந்த ஓர் ஆயிரம் ஸஹாபிகள் அன்னாருடன் இணைந்து கொண்டார்கள்.

அன்னார் (ஸல்) ஜாபிர் (ரலி) அவர்களிடம், நீர் விரைவாக செல்வீராக ; உம் மனைவியிடம், நான் வரும் வரை பானையை அடுப்பிலிருந்து இறக்க வேண்டாம் என்றும் ரொட்டிகளையும் சமைக்க ஆரம்பிக்க வேண்டாம் என்றும் கூறுவீராக! என்றார்கள். ஜாபிர் (ரலி) அவர்கள் வேகமாக சென்று தம் மனைவிக்குத் தகவல் கொடுத்தார்கள். உணவோ வெறும் சில மனிதர்களுக்கான அளவுதானே இருக்கிறது! ஆனால் இவ்வளவு பேர் வருகிறார்களே! இப்பொழுது என்ன நடக்குமோ? என்று அந்த அப்பாவிப்

இதன் தொடர்ச்சி. 6-ம் பக்கம் ......

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad